பக்கங்கள்: 19

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 21 சனிக்கிழமை 04.02.2023 கதிர் 88

இனி அது ரகசியம் அல்ல!

செப்டெம்பர் மாத காலம். 25ஆம் திகதி 1959. அன்று வெள்ளிக்கிழமை. கொழும்பு ரோஸ்மீட் பிளேஸ் 65ஆம் இலக்க வீடு. வெளியே காவலுக்கு ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் இருக்கிறார். வருகிறவர்களை என்ன ஏது ☞2

# புதிய வரிகளை எதிர்த்து பெப். 8 பெரும் போராட்டம்

## 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் களம் குதிப்பு

**அரசின் புதிய வரிக் கொள்கைக்கு எதிராக பெப்ரவரி 8ஆம் திகதி பெரும் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளன.**

**அரசு ஜனவரி முதலாம் திகதி முதல் அறிமுகப்படுத்தியுள்ள தனியாள் முற்பண வருமான வரியை எதிர்த்தே இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. புதன்கிழமை நடக்கவுள்ள இந்தப் போராட்டத்தில் அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்த 40 தொழிற்சங்கங்கள் ஈடுபடப்போகின்றன என்று ஒருங்கிணைந்த துறைமுக தொழிற்சங்கங்களின் ஆளுநர் நிரோன கொரகன்ன தெரிவித்தார்.** ☞2

## ரணிலின் கொள்கை உரை மீது 9, 10ஆம் திகதிகளில் விவாதம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் 08ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவிருக்கும் அரசின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தை எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் நடத்துவது என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் ☞11

## எங்கள் காணியையும் விடுவியுங்கள் அந்தோனிபுரத்தில் மக்கள் உருக்கம்



### அமைச்சரிடம் மனுவும் கையளிப்பு

(இ.கலையமுதன்)
யாழ்ப்பாணம், பெப். 4

வலி. வடக்கில் தங்கள் காணிகளும் விடுவிக்கப்படாதா என்ற ஏக்கத்துடன் வெள்ளிக்கிழமை பலாலி அந்தோனிபுரத்தில் நடந்த கையளிப்பு நிகழ்விற்கு வந்திருந்த மக்கள் பலர் தமது காணிகளையும் ☞2

## 11ஆம் திகதியே வலி.வடக்கில் உண்மையான காணி விடுவிப்பு

(இ.கலையமுதன்)
யாழ்ப்பாணம், பெப். 4

வலி. வடக்கில் இலங்கைப் படையினரின் பிடியிலிருந்த 108 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான சம்பிரதாயபூர்வ நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. எனினும் விடுவிக்கப்பட்ட காணிகளில் எவையும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை. எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி ரணில விக்கிரசிங்கவே காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்பார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணம் வரும்போதே விடுவிக்கப்பட்ட காணிகளுக்கான உறுதி பத்திரங்களும் ஊக்கத் தொகையும் வழங்கப்படும் என்றார் மீன்பிடித்துறை ☞2

## 13ஐ முழுதாக அமுல்ப்படுத்த இந்தியத் தலையீடு அவசியம்


### ஜெய்சங்கரிடம் தமிழ்நாடு பா.ஜ.க. வலியுறுத்து



இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் எவ்வித மாற்றமுமின்றி உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அவசியமான தலையீட்டை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டுமென கே.அண்ணாமலை தலைமையிலான தமிழ்நாடு பாரதீய ☞2

## புங்குடுதீவிலிருந்து நால்வர் இராமேஸ்வரத்தில் தஞ்சம்

### நேற்றிரவு படகு மூலம் சென்றடைந்தனர்



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப். 4

இலங்கையில் இருந்து நேற்றிரவும் நான்கு பேர் தமிழ்நாட்டைச் சென்றடைந்துள்ளனர். இராமேஸ்வரத்தையொட்டிய திட்டில் இறக்கிவிடப்பட்ட அவர்கள் நால்வரும் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டனர். ☞2

## மாணவர் பேரணிக்கு ஆதரவு தாருங்கள்

### சிறீதரன் எம்.பி அழைப்பு



பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு தருமாறு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மக்களுக்கு ☞11

## 13இன் அமுலாக்க முயற்சிகளுக்கு இந்தியாவின் அழுத்தமே காரணம்

### சரத் வீரசேகர தெரிவிப்பு



இந்தியாவின் கடும் அழுத்தத்தினாலேயே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர.

பிரபாகரன் ஆயுதத்தால் அடைய முற்பட்ட நோக்கத்தை பேனாவினால் பெற்றுக்கொள்ள ☞11

## 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த மக்கள் வாக்கெடுப்பு அல்லது ஜனாதிபதி தேர்தல் வேண்டும்



### இப்படி வலியுறுத்துகிறார் கம்பன்பில

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டுமாயின் அது தொடர்பில் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் ☞11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று விசாரித்து உள்ளே விடுகிறார். அப்போதெல்லாம் இப்போதிருப்பதைப் போல கெடுபிடியான உடல் சோதனைகள் கிடையாது. காவலர்கள் கொஞ்சம் கண்ணியத்தை மிச்சம் வைத்திருந்தார்கள்.

மக்களில் பலரும் அங்கு காத்திருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் வீட்டின் முன் விறாந்தையில் அமர்த்த முடியாது என்பதால் ஒரு 20 பேர் உள்ளே அமர்ந்திருக்கிறார்கள். 40 பேர் வரையில் வெளியே காத்திருக்கிறார்கள். உள்ளே இருப்பவர்கள் ஒவ்வொருவராகத் தமது காரியம் முடிந்து வெளியேற வெளியேற வெளியே இருப்பவர்கள் உள்ளே சென்றுகொண்டிருக்கிறார்கள். கொழும்பின் புலர்காலை வேளை, மிக ரம்மியமாக இருக்கின்றது.

வெளியே காத்திருப்பவர்கள் வரிசையில் பிக்கு ஒருவரும் இருக்கிறார். பொரல்ல அரச ஆயுர்வேத கல்லூரியின் விரிவுரையாளர் அவர். பொரல்லயிலேயே ஒரு ஆயுர்வேத மருத்தகமும் வைத்திருக்கிறார் அவர். தான் பணியாற்றும் ஆயுர்வேதக் கல்லூரிக்கான சில வேண்டுகோள்கள் அடங்கிய மனுக்களுடன் அவர் பொறுமையுடன் அமர்ந்திருக்கிறார்.

அப்போதுதான் "எங்கள் ஆட்சி – அப்பே ஆண்டுவ" என்ற முழக்கம் பிரபலமாகியிருந்தது. அதனால் ஆட்சியாளர்களைச் மக்கள் சந்திப்பதில் அவ்வளவு தடங்கல்கள் இருந்ததில்லை. மக்கள் தங்கள் ஆட்சி என்பதை அனுபவிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

வெளியே காத்திருந்த பிக்கு இப்போது உள் விறாந்தைக்கு வந்துவிட்டார். ஒரு மூலையில் அமர்ந்துகொள்கிறார். தன் அருகே இடதுபுறமாக இருந்த ஒரு ஸ்ரூரில் தான் கொண்டு வந்திருந்த ஆவணங்களடங்கிய பையை வைத்துக்கொள்கிறார். அவர் அருகே மற்றொரு தேரரும் அமர்திருக்கிறார். அவர் பொலன்னறுவையிலிருந்து வந்திருக்கிறார். அவர் பெயர் ஆனந்த தேரர். அங்கு நடப்பவற்றுக்கெல்லாம் சாட்சியாக அவர் அமர்ந்திருக்கிறார். கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் முகாமையாளர் நியமனம் தொர்பான சிக்கல் குறித்துக் கலந்துரையாடுவதற்காக அவர் அங்கு வந்திருக்கிறார்.

ஒவ்வொருவராகப் பெயர் குறிப்பிட்டதும் அவர்கள் எழுந்து சென்று தாம் பார்க்க வந்திருக்கும் தலைவரைப் பார்த்து தமது குறைநிறைகளைச் சொல்லித் தீர்வைப் பெற்றுச் சென்றுகொண்டிருக்கிறார்கள். தல்துவே சோமரத்ன தேரர் என்று பெயர் அழைக்கப்பட்டதும் அவர் எழுந்து நிற்கிறார். முன்னாள் அமர்ந்திருந்த நாட்டின் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவரைப் பார்த்ததும் மரியாதை நிமித்தமாக எழுந்து நிற்கின்றார். தேரரை நோக்கி நடந்து வந்து தலைதாழ்த்தி வணக்கம் சொல்கிறார். அதுதான் பிக்குகளுக்குத் தலைவர்கள் மரியாதை செலுத்தும் முறை.

பின்னர் தேரரிடம் தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறார். ஆயுர்வேதக் கல்லூரியில் சில முன்னேற்றங்கள் செய்யப்படவேண்டியிருக்கிறது என்று சோமரத்ன தேரர் சொல்கிறார். என்ன தேவை என்பதை தேரர் ஒரு மனுவாகத் தந்தால் அதனை சுகாதாரத்துறை அமைச்சர் ஏ.பி.ஜெயசூரியவை மூலம் கவனிக்கச் செய்வார் என்று பண்டாரநாயக்க உறுதிகூறுகிறார்.

நேரம் காலை 9.45. சோமரத்ன தேரர் உடனே தனது இருக்கையில் அமர்ந்து தனது இடது புறத்தில் வைத்திருந்த ஆவணப் பையில் கையைவிடுகிறார். அவர் ஏதோ ஒரு மனுவை எடுத்துத் தரப்போகிறார் என்று பண்டாரநாயக்க காத்திருந்த நேரத்தில் தேரர் மறைத்து வைத்திருந்த ரிவோல்வரை (கைத்துப்பாக்கி) எடுத்து 'டப் டப்' எனச் சுடுகிறார். இடைவெளியே இல்லாத நெருக்கத்தில் பிரதமர் பண்டாரநாயக்கவின் நெஞ்சிலும் அடிவயிற்றிலும் அந்த இரு குண்டுகளும் பாய்கின்றன. பிரதமர் நிலத்தில் வீழ்கிறார். அதன் பின்னரும் வெறி அடங்காமல் மீதமிருந்த 4 குண்டுகளையும் சுடுகின்றார் தேரர். அதிலும் ஒரு குண்டு பண்டாரநாயக்கவின் கைகளைத் தாக்குகின்றது. அது 6 குண்டுகள் மட்டுமே போடக்கூடிய கைத் துப்பாக்கி.

அங்கிருந்த ஏனையவர்கள் முதலில் அதிர்ந்து போனாலும் பின்னர் சுதாகரித்துக்கொண்டு தேரரைப் பிடித்துத் தாக்கப் போகிறார்கள். காயப்பட்டு வீழ்ந்து கிடந்த நிலையிலும் பண்டாரநாயக்க சிரமப்பட்டு சற்று நிமிர்ந்து தேரரை ஒன்றும் செய்யாதீர்கள் என்று மக்களிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கிறார்.

படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்ட பண்டாரநாயக்க சிகிச்சை பயனின்றி மறுநாள் செப்டெம்பர் 26ஆம் நாள் உயிரிழந்தார்.

இது பண்டாநாயக்கவின் கொலை தொடர்பில் பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் வரும் கொலைக்களக் காட்சியின் தமிழ் மொழியாக்கம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு எதிராகத் தெற்கில் பிக்குகள் எழுப்பி வரும் குரலைக் கேட்கும்போது, இந்தக் காட்சிகள் மீண்டும் கண் முன் விரிந்து போகின்றன.

பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது 13ஆவது திருத்தத்தை நீக்குவதாக இன்று, சுதந்திர தினத்தின்போது ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். அப்படியில்லை என்றால் 8ஆம் திகதி கொழும்பில் பெரும் போராட்டம் இடம்பெறும் என்றும் எச்சரித்திருக்கிறார். அன்றுதான் ரணில் நாடாளுமன்றத்தில் கொள்ளைவிளக்க உரை ஆற்ற இருக்கின்றார்.

**- இடிமின்னல் -**

## புதிய வரிகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை, துறைமுகங்கள், நீர் வழங்கல் சபை, சுகாதாரத்துறை ஆகிய அத்தியாவசிய சேவைத்துறைகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநாளில் தமது ஊழியர்களும் தொழற்சங்கப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று இலங்கை மின்சார சபை தொழற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஆளுநர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

அரசு புதிய வரியை மீளப்பெறவில்லை என்றால் தாமும் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக பெற்றோலிய பொது ஊழியர்கள் தொழிற்சங்க பொதுச் செயலாளர் அசோக ரன்வல தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கையாக இந்தப் புதிய வரியை அரசு விதித்துள்ளது. அது நாட்டின் நடுத்தர மக்களையும் பெரிதும் பாதித்துள்ளது. இந்த வரித் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாய்க்கும் மேலாக வருமானம் பெறுபவர்கள் எல்லோருமே வரி கட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## 11ஆம் திகதியே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டக்ளஸ்.

பெப்ரவரி 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வின் போதே காணிகளுக்கான பத்திரங்கள் மற்றும் ஊக்கத் தொகையும் வழங்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## எங்கள் காணியையும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன் விடுவிக்கக்கோரி மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனு வழங்கினர்.

அமைச்சரின் வாகனத்தை மறித்த காணி உரிமையாளர்கள், தமது காணிகளையும் விடுவித்துத் தருமாறு கோரி மனுவைக் கையளித்தனர். மீன்பிடித்துறை அமைச்சர் என்ற ரீதியில் கரையோரப் பகுதிகளையாவது விடுவித்து தாருங்கள் என்று அவரிடம் மன்றாடினர்.

"கட்டம் கட்டமாக காணிகள் விடுவிக்கப்படும்" என்று அவர்களுக்குப் பொதுவாகப் பதிலளித்த அமைச்சர், அதுவரை பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் மக்களுக்கு அறிவுறுத்தினார்.

தமது காணிகளையும் விடுவிக்குமாறு அப்பகுதியில் நின்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகளிடமும் அந்த மக்கள் கோரிக்கை வைத்தனர்.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதியிடம் "எங்கள் காணியையும் விடுவியுங்கள் ஐயா" என ஒருவர் கெஞ்சியது அங்கிருந்தவர்களின் மனதை நெருடியது.

காங்கேசன்துறை – மத்தி (ஜே 234) – 50.59 ஏக்கர், மயிலிட்டி – வடக்கு (ஜே 246) – 16.55 ஏக்கர் , தென்மயிலை (ஜே 240) – 0.72 ஏக்கர், பலாலி – வடக்கு (ஜே 254) – 13.033 ஏக்கர், நகுலேஷ்வரம் (ஜே 226) –28 ஏக்கருமாக, 108 ஏக்கர் காணி மிக நீண்ட காலத்தின் பின்னா விடுவிக்கப்படுவதாக அறிவித்து மாவட்டச் செயலரிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது.

## 13ஐ முழுதாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதாக் கட்சியினர் தமது அயலுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய் சங்கரிடம் கூட்டாக வலியுறுத்தினர்.

அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை அரசு திருத்தம் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பகிரங்கமாக வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இந்திய மத்திய இணை அமைச்சர் கலாநிதி எல்.முருகன், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையின் முன்னாள் தலைவர்களான சி.பி.ராதாகிருஷ்ணன், பொன் ராதாகிருஷ்ணன் மற்றும் தற்போதைய தலைவர் கே.அண்ணாமலை ஆகியோர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தனர்.

அரசமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தை எவ்வித மாற்றமுமின்றி உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான தலையீட்டை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். இதனை ஒரு மனுவாகவும் அவர்கள் ஜெய்சங்கரிடம் கையளித்தனர்.

## புங்குடுதீவிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இவர்கள் நால்வரும் அகதித் தஞ்சக் கோரிக்கையுடன் இந்தியாவை அடைந்துள்ளனர்.

மன்னாரிலிருந்து படகு மூலம் சென்ற இவர்கள் நேற்று இரவு 10 மணியளவில் அதிகாரிகளால் மீட்கப்பட்டனர்.

நால்வரும் யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களில் இரு பெண்கள், ஒரு ஆண் மற்றும் ஒரு சிறுவனும் அடங்கியுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799


அனைவருக்கும் 75வது சுதந்திர தின வழ்த்துக்கள்!
அதியுயர் ஜப்பான் தொழிநுட்பத்துடன்
நுண்ணுயிர்களை கொல்லக்கூடிய ஒரே பெயின்ட்
நிப்போனிடமிருந்து மட்டுமே..!
NIPPON
HEALTH CARE SOLUTIONS
MEDIFRESH 3in1
SILVER ZINC ION
NIPPON PAINT
சுற்றுச் சூழலுக்கு உகந்த பெயின்ட்
நீண்ட காலம் உழைக்கும்
அற்புதமான மறைக்கும் சக்தி
சிறந்த பூஞ்சைக் காப்பான்
விரைவாகக் காயும்
கறை, கொப்புளங்கள், உரிதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு
பயன்படுத்தச் சுலபமானது
லீட் அல்லது மெர்குரி சேர்க்கத் தேவையில்லை
Cover hariline cracks
WATER PROOF
Water Proof
Washable
99% Effective against Bacteria
www.nipponpaint.lk
மெடிபிரஷ் 3 இன் 1
நிப்போன் தீய நுண்ணுயிர்களுக்கு எதிரான மெடிபிரஷ் பெயின்டானது தண்ணீரை ஊடுபுக விடாதது, கழுவக்கூடியது, நூலிழை வெடிப்புக்களை மறைக்கக் கூடியது. ஆரோக்கியத்தையும் சிறந்த சுகா தாரத்தையும் தரக்கூடிய வகையில் நீண்டு நிலைக்கக் கூடியது. சில்வர் அயன் மற்றும் சிங் அயன் ஆகிய சிறப்புக் கலவைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. இந்தக் கலவை ஜப்பானின் உணவு ஆராய்ச்சி ஆய்வு கூடத்தில் பரிசோதித்து உறுதிப்படுத்தப்பட்டது.
ஈகோலி, எம்ஆர்எஸ்ஏ. ஸ்டேஃபிளோகோகஸ் ஆரியஸ் போன்ற ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தீய நுண்ணுயிரக ளின் வளர்ச்சியை, பெருக்கத்தைத் தடுக்கிறது. அதன் மூலம் நீங்கள் வாழும் சூழலைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்கிறது. அதனால் இந்தப் பெயின்ட் வீடுகள், வைத்தியசாலைகள், உணவுப் பாதுகாப்புப் பகுதிகள் ஆகியவற்றுக்கு மிகப் பொருத்தமானது.
Environmentally Friendly Paint
GREEN CHOICE
ISO
NIPPON PAINT LANKA (PVT) LTD
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk
A product of ISO 9001 : 2015 certified company

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது இந்தியாவின் தலையீட்டுக்கான நேரம்

இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியினர் தமது நாட்டின் அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரைச் சந்தித்து, இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை மாற்றம் ஏதுமின்றி முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான புதுடில்லியின் தலையீட்டை வலியுறுத்தியுள்ளனர்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடாது என்று இலங்கையில் வழக்கம்போல பிக்குகளும் கடும்போக்காளர்களும் போர்க்கொடி தூக்கியிருக்கும் நிலையில், புதுடில்லியின் இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் கே.அண்ணாமலை தலைமையில் இந்திய மத்திய இணை அமைச்சர் கலாநிதி எல்.முருகன், கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையின் முன்னாள் தலைவர்களான சி.பி.ராதாகிருஷ்ணன், பொன் ராதாகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய குழுவே அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்து இந்தியத் தலையீட்டை வலியுறுத்தியுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான அழுத்தத்தையும் தலையீட்டையும் கொடுக்கக்கூடிய பொறுப்பும் கடமையும் இந்திய அரசுக்கே இருக்கின்றது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அரசமைப்பின் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக இலங்கையும் மறு தரப்பாகத் இந்தியாவுமே கையெழுத்திட்டுள்ளன. எனவே அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் கடப்பாடு புதுடில்லிக்கு இருக்கின்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தியா தொடர்ந்து கொழும்புக்குக் கூறிவந்தாலும் அதன் மீது கடுமையான அழுத்தங்களை வழங்கியதில்லை. அதற்கு முக்கியமானதொரு காரணம் தமிழர்கள் அதனை ஒரு தீர்வாக ஏற்கவில்லை என்பது.

தமிழர்கள் ஒருபோதும் 13ஐ தமது பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. தீர்வுக்கான தொடக்கமாகக்கூட அது இருக்க முடியாது என்று அதிலிருந்து விலகியே நிற்கின்றார்கள். இந்த நிலையில் இலங்கையின் அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் திருத்ததை நடைமுறைப்படுத்தும் முழுப் பொறுப்பும் அதனை உருவாக்கிய இலங்கை அரசுக்கும் உருவாக்க வைத்த இந்திய அரசுக்குமே உரியது.

கடந்த 35 வருடங்களாக இந்தக் கடப்பாட்டிலிருந்து இரு அரசுகளுமே தவறியிருக்கின்றன. இரு நாடுகளுமே எழுதப்பட்ட அரசமைப்பு ஒன்றின்படியே இயங்கி வருகின்றன. அவற்றின் மக்களாட்சித் தன்மையின் அடிநாதமாக இந்த அரசமைப்புக்களே இருக்கின்றன. அதனை ஆட்சியாளர்கள் மீறி நடப்பது எவ்வறவு பாரதூரமான குற்றம் என்பது இரு அரசுக்களுக்குமே நன்கு தெரிந்த விடயம். எனவே இலங்கை ஆட்சியாளர்கள் அரசமைப்பை மீறிச் செயற்படுவதற்கு இந்தியா அனுமதிக்கக்கூடாது. உலகின் பெரும் மக்களாட்சி நாடு என்கிற வகையிலும் இந்தியாவிற்கு அந்தக் கடப்பாடு இருக்கின்றது.

இந்த அடிபடைகளிலேயே அண்ணாமலை குழுவினர் இந்தியாவின் தலையீட்டை வலியுறுத்துகின்றார். அது சரியானதும்கூட. மூன்று தசாப்தங்களாகக் கடைப்பிடித்து வந்த தனது அமைதியைக் கலைத்து இந்த விடயத்தில் இந்தியா தீவிரமான தலையீட்டைச் செலுத்தவேண்டிய தருணம் இது. அதற்கான பொறுப்பும் புதுடில்லிக்கு இருக்கின்றது.

# தமிழருக்கு உரிமைகளற்ற நாள்

## சுதந்திர தினம் குறித்து விக்னேஸ்வரன் செய்தி



பெப்ரவரி மாதம் 4ஆம் நாள் சிங்களப் பெரும்பான்மையினருக்கு சுதந்திர தினமாக அமையினும், அவ்வாறு அவர்கள் கொண்டாடுவார்கள் எனினும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அது சுதந்திரமற்ற, உரிமைகள் அற்ற, சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாள். எனவேதான் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து குறித்த நாளை கரிநாளாக அடையாளப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன்.

இதுதொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெப்ரவரி 4ம் திகதியன்று வடக்கு கிழக்கு தழுவிய வர்த்தக சமூகத்தினர், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேரூந்து உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் தொழில் புறக்கணிப்பிலும் முழுமையான அடைப்பிலும் ஈடுபட உள்ளனர்.

எமது மனோநிலையை மன ஏக்கத்தைஉலகுக்குவெளிப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

ஒற்றையாட்சி மூலம் சிங்களப் பெரும்பான்மையினர் பெற்ற அரசியல் ஆதிக்கத்தை கடந்த 75 ஆண்டுகளாக சிங்கள அரசியல்வாதிகள் கட்டிக்காத்து வருகின்றனர். தந்திரமாக அவர்கள் பெற்றுக்கொண்ட ஒற்றையாட்சி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டில் வாழும் தமிழ்மக்கள்என்று முழுஅதிகாரப்பகிர்வைப் பெற சிங்கள மக்கள் அனுமதிக்கின்றார்களோ அன்றேதமிழ்மக்களின் விடிவு நாள்.

அதுவரையில் வருடந்தோறும் பெப்ரவரி நான்காம் நாள் என்ற கரிநாள் வந்து போய்க்கொண்டிருக்கும். நாமும் அன்றைய தினம் எமது மனோநிலையை வெளிப்படுத்திக்கொண்டேயிருப்போம்.

இளைஞர் யுவதிகளின் பேரணியை வரவேற்கும் அதே நேரத்தில் அவர்கள் பயணம் பாதுகாப்புடனும் பொறுப்புடனும் வெற்றியுடனும் நடந்தேற வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றேன் – என்றுள்ளது.

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்கள் பதவி விலகினர்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்கள் தமது பதவியிலிருந்து விலகியுள்ளனர். தமது முடிவை அவர்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

5 உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவில் இருந்து மொகான் சமரநாயக்க மற்றும் உடினி விக்கிரமசிங்கே ஆகியோர் பதவி விலகியுள்ளனர்.

தொழில்வாண்மைக்குப் புறம்பான, சூமுகமாக இல்லாத, பொறுத்துக்கொள்ள முடியாத பணிச் சூழல் காரணமாகவே தான் பதவியில் இருந்து விலகுகின்றார் என்று மொகான் சமரநாயக்க தனது பதவி விலகல் கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஜனவரி 20ஆம் திகதி ஆணைக்குழுவின் கூட்டம் நடந்தபோது, தலைவரால் அனுமதிக்கப்பட்ட கூலிப்படையைச் சேர்ந்த சிலர் தன்னை அச்சுறுத்தி மானபங்கப்படுத்தினர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

ஜனவரி 24ஆம் திகதி நடந்த தேசிய சபைக் கூட்டத்தில் தனக்கு எதிரான அச்சுறுத்தல்களைத் தலைவர் நியாயப்படுத்திய விதம், எதிர்காலத்திலும் தான் அச்சுறுத்தப்படவோ தாக்குதலுக்கு உள்ளாகவோ கூடும் என்கிற அச்சத்தை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவர், குழுவின் ஏனைய உறுப்பினர்களின் உடன்பாடு இல்லாமல் முடிவுகளை எடுப்பதுடன் அறிக்கைகளையும் விடுகின்றார். இதனால் ஏனைய உறுப்பினர்கள் தேவையற்றவர்கள் என்கிற நிலையை ஏற்படுத்துகின்றார் என்றும் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

மின் கட்டணங்களை மீண்டும் அதிகரிப்பது தொடர்பில் ஆணைக்குழுவிற்கும் மின்சாரத்துறை அமைச்சருக்கும் இடையில் மோதல் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. கட்டணங்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்கிற அமைச்சரின் பரிந்துரையைச் செயற்படுத்த அனுமதிக்க முடியாது என்று ஆணைக்குழு திட்டவட்டமாக நிற்கின்றது.

ஆணைக்குழுவின் இந்த முடிவு அதன் கூட்டத்தில் அனைவராலும் இணங்கப்பட்டு எடுக்கப்பட்டது என்றும் ஆனாலும் தேசிய சபைக் கூட்டத்திற்கு வந்த உறுப்பினர்கள் அந்த முடிவுக்கு மாறாகக் கருத்துத் தெரிவித்தார்கள் என்றும் குழுவின் தலைவர் ஏற்கனவே ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே இரு உறுப்பினர்களும் பதவி விலகியுள்ளனர்.

# வசந்த முதலிகேயின் பிணையை எதிர்த்து மேன்முறையீடு – பொலிஸ்



அனைத்துப் பல்கலைக்கழகங்க மாணவர் பேரவையின் அழைப்பாளர் வசந்த முதலிகேக்கு வழங்கப்பட்ட பிணையை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் முறையிடுவதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் தயாராகி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இந்த மேன்முறையீட்டு மனு அடுத்த வாரம் கொழும்பு மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையம் தெரிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து விரட்டிய மக்கள் போராட்டத்தில் மிக முக்கிய நபராகச் செயற்பட்டவர் வசந்த முதலிகே. இதனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு நீண்ட நாள்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு எதிராகக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று வழக்குகளிலும் புதன்கிழமை பிணை வழங்கப்பட்டது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் அந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிவான் அவருக்குப் பிணை வழங்கினார். முன்னதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த வசந்த முதலிகே அந்த வழக்கிலிருந்து செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டிருந்தார்.

# இலங்கையுடன் எமது ஒத்துழைப்பை கண்டு துவண்டு போவதை நிறுத்துக!

## வொஷிங்டனை எச்சரித்தது சீனா



அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்டோரியா நுலாண்ட் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் இலங்கையில் சீனா தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கு சீனா பதில் வழங்கியுள்ளது.

இலங்கைக்கான கடன் நிவாரணத்துக்காக, சர்வதேச நாணய நிதிய நிபந்தனை விடயத்தில் சீனா காட்டியுள்ள முனைப்பு போதாது என்று நுலாண்ட் தெரிவித்திருந்தார்.

எனினும் உண்மையில் அமெரிக்கா, இலங்கைக்கு ஏதாவது செய்ய வேண்டுமானால், தமது நேர்மையை காட்ட வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வழக்கமான செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த சீன வெளியுறவு அமைச்சக பேச்சாளர் மாவோ நிங், அமெரிக்க ராஜதந்திரி கூறியதில் உண்மை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஏற்றுமதி – இறக்குமதி வங்கி ஏற்கனவே இலங்கைக்கு ஆதரவைத் தெரிவிக்கும் கடிதத்தை வழங்கியுள்ளது.

இலங்கையும் அதற்கு சாதகமாக பதிலளித்துள்ளது மற்றும் அதற்காக சீனாவிற்கு நன்றி தெரிவித்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் இலங்கையுடனான சீனாவின் நெருங்கிய ஒத்துழைப்பைக் கண்டு துவண்டு போவதை நிறுத்துமாறு வோஷிங்டனை அவர் எச்சரித்துள்ளார்.

உண்மையான நண்பன் என்ற வகையில், சீனா, இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்களையும் சவால்களையும் உன்னிப்பாகக் கவனித்து, அதன் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான உதவிகளை மிகச் சிறந்த முறையில் வழங்கி வருகிறது என்றும் சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# கடவுச்சீட்டுக்களை வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்வதற்கு புதிய வசதி!

கடவுச்சீட்டுகளை விண்ணப்பதாரியின் முகவரிக்கே தபால் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கடவுச்சீட்டுக்களை விண்ணப்பதாரர்களின் நிரந்தர முகவரியில் மட்டுமின்றி தற்காலிக வசிப்பிடத்தின் முகவரிக்கும் அவற்றை தபால் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் கடவுச்சீட்டைக் கொண்டு வர வேண்டிய தற்காலிக முகவரியையும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும் என குடிவரவு மற்றும் தேசிய கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர் இலுக்கும்புர தெரிவித்தார்.

பிரதேச அலுவலகங்களிலும் இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய வானொலியில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட போது இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.




# இலவச யோகா பயிற்சி

தென்மராட்சி, ஜன. 4

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இலவச யோகாபயிற்சிவகுப்புக்கள்தொடங்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள எவரும் வயது வேறுபாடின்றி இந்த வகுப்பில் இணைய முடியும் என இலக்கிய அணியினர் தெரிவித்துள்ளனர். மன ஒருமைப்பாடு மற்றும் மன அமைதி ஆகியவற்றை பெற்றுக் கொள்ள யோகாசனப் பயிற்சி வழிவகுக்கும்.

பயிற்சிகளை யோகா போதனாசிரியர் சி.உமாசுதன் வழங்குவார்.

# மொட்டு வேட்பாளர் கஞ்சாவுடன் கைது!



தம்பலகமுவ பிரதேச சபைக்கு போட்டியிடும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் 250 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மொல்லிப்பொத்தானை சந்தியில் கஞ்சா வைத்திருந்த நிலையில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கஞ்சா கையிருப்பில் வைத்து, கடத்தல்காரர்கள் வரும் வரை காத்திருந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 257

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சர்வதேச ரீதியில் சிவில் கட்டமைப்பு அவசியம்

தமிழருக்கு எதுவிதமான தீர்வு என்றாலும் அதனை எதிர்க்கும் பேராண்மை குழுக்கள் இப்போதும் கூச்சலிடத் தொடங்கியுள்ளன. அதில் மகாநாயக்க தேரர்களும் 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஜனாதிபதிக்கு கடிதம் வரைந்து உள்ளார்கள்.

கலாநிதி ஜெயசங்கருடன் ஒப்புக் கொண்டால் என்ன, அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் விக்டோரியா நூலண்டுக்கு உத்தரவாதம் அளித்தால் என்ன, மகாநாயக்க தேரர்களையும் இராணுவத்தையும் மீறி அதை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்குத் திராணி உண்டா என்ற கேள்வி உள்ளது.

இல்லை, சர்வதேச அழுத்தங்களால் 13ஆவது திருத்தத்தை அவர் நடைமுறைப்படுத்த தீர்மானித்தால் அது முழுமையானதாக அல்லது எவ்வளவு முழுமையானதாக இருக்கும் என்பதை இன்று நாம் காண வாய்ப்புக் கிட்டலாம்.

ஏனெனில் போரின் பின், அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீன் மூன் ஸ்ரீலங்காவுக்கு வந்தபோது, 13ஆம் திருத்தத்திற்கு மேலே சென்று தமிழ் மக்களுக்கு தீர்வு தருவதுதான் தனது அடுத்த முக்கிய கட்டமென உத்தரவாதம் அளித்தவர் அன்றைய ஜனாதிபதி மஹிந்த.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போதும், தமிழ் புலம்பெயர் மக்கள் தாங்கள் ஸ்ரீலங்காவை அந்த நெருக்கடியில் இருந்து மீட்டு வருவோம் என்று அறைகூவிய போதும், ஜனாதிபதி ரணில் தன் பேச்சுக்களில் பிரேரித்தது அவரது மாமனார் ஜே.ஆர். விரும்பிய மாவட்ட சபை முறைகளையே. ஆனால், பேரினவாத தரப்புகள் அதனைக் கூட வழங்கத் தேவையில்லை, இதற்கு உள்ளூராட்சி முறைமையே போதும், ஒற்றை ஆட்சியில் ஒரு சட்டங்களினால் இவற்றை நிர்வகிக்கலாம் எனப் பேசினர்.

ஏன், தமிழ் மக்களின் பலமும் ஆதரவும் போரின் பின் முடங்கி விட்டன. அவர்கள் மீண்டெழுவது என்பது இயலாத காரியம், அதனால் அவர்களுக்கு எதனைத் தந்தாலும் அவர்கள் ஏற்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறார்கள் என்ற பேரினவாத போக்குகளே இதற்கு காரணம்.

1987இல் ஆக்கப்பட்ட ஒப்பந்தத்திலும், 13 வது திருத்தத்திலும் ஒன்றும் இல்லை, இது தேவையற்றது என்று எடுத்தெறிந்து விட்டு, இப்பொழுது அதிலிருந்து முன்னேறலாம் என தமிழர் தரப்பு எண்ணினாலும், அதற்கு எதிரான போர்க்கொடிகளைக் கணக்கெடுக்க வேண்டியுள்ளது. ஆனாலும் இவற்றுக்காகத் தமிழ் மக்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளைத் தளர்த்தி, அன்றில் விட்டுக் கொடுத்து, தாழ்வு மனப்பான்மைகளுடன் அவற்றை ஏற்க வேண்டியது இல்லை. ஏனெனில் சர்வதேசங்களின் பார்வையில் தமிழ் மக்களது கோரிக்கையில் நியாயம் உண்டு என அவை ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் அவற்றை சிங்கள தரப்புகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளில்தான் சிக்கலை காண்கின்றன.



13 ஆம் திருத்தச் சட்டத்தின் பின் சந்திரிகாவின் தீர்வு திட்டத்தில் பிராந்தியங்கள், அவற்றின் இணைப்புகள், அதிகாரங்கள் என வரையப்பட்டு, பின்னர் நோர்வேயின் இணக்க பேச்சுவார்த்தைகளில் சமஷ்டி அமைப்பை நோக்கி போகலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. விடுதலைப்புலிகள் அவற்றின் கதாநாயகர்களாக இருந்தாலும், அவர்களது வீழ்ச்சிக்குப் பின் அப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை மீண்டும் பார்க்கத் தேவையற்றவை என்பதை சர்வதேசங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. மேலைத்தேய நாடுகள் பல சமஷ்டி கட்டமைப்புகளாலேயே நிர்வாகங்களை நடத்துகின்றன. வேற்றுமைகளை ஏற்று, அவற்றில் ஒற்றுமை கண்டு, முன்னேறுகின்றன. ஆகவே அவை ஒரேடியாக இல்லாவிட்டாலும் சமஷ்டி முறைமை ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல என தள்ளி விடப் போவதில்லை. ஆயின், படிப்படியாக அதனை நோக்கி பயணிக்க வேண்டிய உத்தியையே கையாள அறிவுரை தருவார்கள். இந்தியாவும் மேற்குலகில் அமெரிக்காவும் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த உத்தரவாதமளித்து, பக்கபலமாக நிற்கும் போது, அதன் கீழ் வரக்கூடிய அதிகாரங்களை பெற்றுக் கொள்வது புத்தி சாதுரியமானது.

இந்த 13ஆம் திருத்தச் சட்டத்தில் அமையும் மாகாண சபைகள் தளமானால் அதன் அத்திவாரமாக இந்தியாவை தமிழ் மக்கள் இணக்க – நேச – சக்தியாக அனுசரித்துக் கொள்ள வேண்டும். இந்தியாவுடன் நடந்த மோதல்கள் துன்பியலானவை. ஆயின் இனப்பிரச்சினை என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய நாடு இந்தியா ஒன்று மட்டுமே என்ற புரிந்துணர்வும், அதனை மீறி அவர்களால் செயற்பட முடியாது என்ற பட்டறிவும் தெளிவும் வேண்டும். இந்தியாவை விலக்கி, சர்வதேசத்தை எதிர்பார்ப்பவர்கள் தமிழ் மக்களிடையே உண்டு. ஆனால் அமெரிக்காவோ, அவர்களுடன் இணைந்தவர்கள் இந்திய பிராந்தியத்தின் தேவைகளுக்காக அக்கறை காட்டுகிறார்களே ஒழிய, பிரித்தானியா கூட அது தனது முன்னாள் காலனித்துவ நாடு, தாங்கள்தான் இன்று இருக்கும் அவலங்களுக்கு வித்திட்டவர்கள் என அதிகாரம் செலுத்தப் போவதில்லை. அவை எல்லாவற்றுக்கும் மேல் அமெரிக்கா எந்த நாட்டிற்குமே நம்பிக்கையான நண்பனாக இருந்ததில்லை. அதன் நட்பு என்பது தேவைகளின் அடிப்படைகளில் அமைவது. அந்தத் தேவைகளுக்காக மனித உரிமைகள். ஐ.நா. கட்டமைப்புகள் போன்றவை அதனது உலக ஒழுங்கிற்காக பாவிக்கப்படும் என்பதால் இந்த ஆதரவு தளங்களை அனுசரண்மையாக்க கூடாது என்பதல்ல, ஆணிவேர் எங்கு அமைய வேண்டும் என்ற சுட்டிக்காட்டலே இது. முத்து குளிக்கப் போகும் முக்குவன் கூட தனது வயிற்றில் கட்டும் கயிற்றினை கடலில் இறங்கியதும் நம்பித் தனது மைத்துனனிடம்தான் கொடுத்துப் போகும் வழமை உண்டு.

இன்றைய நிலையில் இந்தியாவுடன் நேரடியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, நிலைமைகளை தெரிவிக்க கலாநிதி ஜெய்சங்கரின் வரவுகளும் கலந்துரையாடலும் வழி செய்து உள்ளன. இப்படியான கலந்துரையாடல்களுக்காக இந்தியாவோடும் சர்வதேச நாடுகளுடனும் ஈடுபட, அரசியல்வாதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் கொண்ட சர்வதேச கட்டமைப்பு அமைக்கப்பட



வேண்டும். அதன் முக்கியத்துவம் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் நடந்து கொண்டிருந்த காலங்களில் இருந்தே முன்வைக்கப்பட்டாலும் இரு பகுதிகளுமே தங்களது அதிகாரத்திலிருந்து மற்றையவர்கள் கோலோச்ச விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் தாங்கள் நியமித்தவர்களையும் தங்களது புலம்பெயர் அமைப்புகளிலுமே தங்கி இருக்க விரும்பினர். இதனால் சர்வதேச கட்டமைப்பு உருவாவதற்கான முயற்சிகள் போரின் கடைசி நாள்கள் வரை பயனளிக்கவில்லை. பின்னர் பாதைகள் மாறலாம் என, நாடு கடந்த தமிழீழ அரசு விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது. அதனோடு இணைந்து கொள்ளாத சிலர் சர்வதேச தமிழ் ஒன்றியத்தை (Flobal Tamil Forum) நிறுவினார்கள்.

கூட்டமைப்பு ஆயர் ராயப்பு யோசப்புக்கு கூறியவாறு தாங்களே தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள், தங்களுக்கு சர்வதேச பிரசாரங்களுக்கான தங்களது கட்டமைப்பை அமைக்கும் எண்ணம் இல்லை என்றார்கள்.

மாவை சேனாதிராஜா இடைப்பட்ட ஒரு காலத்தில் ஜஸ்மின் சூகா போன்றவர்களை எல்லாம் இணைத்து மனித உரிமை பரப்பில் இயங்குவதற்கு ஒரு கட்டமைப்பு உருவாகும் என்றார். ஆயின் அப்படியான ஒன்று இன்று வரை உதயமாகவில்லை. நாட்டில் தேர்தல் அரசியல் என்றவுடன் எத்தனையோ பேர் போட்டியிட தில்லுமுல்லுப் படுகிறார்கள். ஆனால் புலம்பெயரிலோ போர் முடியும் காலங்கள் வரை அர்ப்பணிப்புடன் இயங்கிய எத்தனையோ பேர் புத்திஜீவிகள் – இப்போது சிலரே விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே – தொடர்ந்தும் அர்ப்பணிப்புகளுடன் இயங்குகிறார்கள். அவர்கள் ஆங்கிலம் மட்டும் பேசுபவர்கள் அல்லர். பிரெஞ்ச் ஜெர்மன் டச்சு, நோர்வீஜியன், டெனிஸ் என பல ஐரோப்பிய மொழிகளில் புலமை பெற்றவர்கள்.

சர்வதேச ரீதியாக இணைக்கப்பட்டு, சர்வதேச நாடுகளுடன் ஈடுபடக்கூடிய கட்டமைப்பு உருவாக வேண்டியது அவசியம் உண்டு. இந்த நாடுகள் தாங்கள் தங்களது காலனித்துவ நாடுகளை விட்டு வெளியேறும் போது விட்டுச் சென்ற முரண்பாடுகளினால் எழுந்த விடுதலைப் போராட்டங்களையும், அவை கையாளப்பட்ட முறைகளிலும் அனுபவம் கொண்டவை. ஆதலால் தமிழ் மக்கள் கோருவது பிரிவினை அல்ல, பிரித்தானியா தன்னலம் கருதி இரண்டு இனங்கள் தேசங்களாக வாழ்ந்த போதும் அதிகாரத்தை பெரும்பான்மையினரிடம் கையளித்து வெளியேறியதால் ஏற்பட்ட வினை இது, இரண்டு தேசங்களும் அவர்களது உரிமைகளுடன் வாழ வழி வகுக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடுகளுக்காக ஐ.நாவில் ஆதரவு தரக்கூடிய வாய்ப்புகளை பார்க்கலாம்

புலம்பெயரில் இருக்கின்ற கட்டமைப்புக்களை விடுத்து, மேலொன்று ஏன் என்ற கேள்விகள் எழும். ஆயின், இருப்பவை அரசியல் மயப்படுத்தப்பட்ட – வாங்கு, மேசைகளில் இருந்து தங்களது அரசியலை முன்னெடுக்கின்றவையாகவே உள்ளன. இந்த கட்டமைப்பு, நிலத்தில் உருவாகும் ஆளுமையானவர்களோடு இணைந்து சர்வதேசத்தில் பயணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு புலம்பெயர் நாட்டிலும் அரசியலை முன்னெடுக்கும் அமைப்புக்கள் உண்டு. எனினும் அவை சர்வதேச ரீதியில் பயணிக்கக் கூடியவையாக இல்லை

தொடர்ந்தும் சுதந்திரமானது தமிழ் மக்களுக்கு இன்று வரை கிடைக்கவில்லை. அதனால் அவர்களது நியாயமான உரிமைகள் நியாயமான முறையில் தரப்பட வேண்டும் என்பதே அவர்களது விடாப்பிடியான தளமாக சர்வதேசத்தில் இருத்தல் வேண்டும். ஆனால் அதற்காக ஈடு செய் நீதியே தரப்பட வேண்டும் என நிற்கலாமா?

(வளரும்....)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** டான் ரி.வி ‘ஸ்பொட் லைற்’ நிகழ்வில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக் கட்சியின் செயலாளர் அருந்தவபாலன் அவர்கள் தமது கட்சித் தலைவரான முன்னாள் முதலமைச்சரின் மீது அடுக்கடுக்காய்க் குற்றம்சாட்டி அளித்த பேட்டியைக் கேட்டீர்களா? கேள்வி கேட்டதற்கு ‘தலையிருக்க வால் ஆடக்கூடாது’ என்று முன்னாள் முதலமைச்சர் பதில் அளித்தாராமே. இது எப்படி இருக்கு?

**உலக்கையார் பதில் :-** அருந்தவபாலனின் நிலை ‘சட்டியிலிருந்து நெருப்புக்குள் குதித்த கதையாய்’ ஆகிவிட்டது. முதலமைச்சரை நம்பி ஏமாந்தவர் பட்டியலில் இவரும் இணைக்கப்பட்டுவிட்டார். ‘தலையிருக்க வால் ஆடக்கூடாது’ என்ற மு.முதலமைச்சரின் பதில் நகைப்புத் தருகிறது. தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்தபோது தலையிருக்க எத்தனை தரம் வாலை ஆட்டினார் என்பது அவருக்கு மறந்து போய்விட்டதுபோல. தலைவலியும் வயிற்றுவலியும் தனக்கு வந்தால்த்தான் தெரியும் எனும் அனுபவ உண்மை இப்போது மு.முதலமைச்சருக்குத் தெரிந்திருக்கும்.

**சல்லடையாரின் சலிப்பு * விதிவிடவே போகுதுங்கோ. முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும் என்பது இதனைத்தானுங்கோ.**

**2. உரலார் கேள்வி:-** இன்றைய நிலையில் உங்களின் விருப்பிற்குரியவரான சுமந்திரனுக்கு ஏதேனும் ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** ஒரு நல்ல அமைச்சனுக்குரிய கடமையை உரைக்கும் திருவள்ளுவர், பகைவர்களுக்குத் துணையானவரை அவரிடமிருந்து பிரித்தலும் தம்மிடம் இருக்கிறவர்கள் பிரிந்து போகாமல் பேணிக் காத்தலும், முன்னே தம்மிடமிருந்து பிரிந்து சென்றவரை மீண்டும் தம்முடன் பொருத்த வேண்டின் பொருத்தலும் செய்ய வல்லவனே நல்ல அமைச்சன் என்கிறார். (‘பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார் பொருத்தலும் வல்லதுஅமைச்சு’). இன்றைய சூழலில் இக் குறளை சுமந்திரன் நன்றாக உள்வாங்கிக்கொள்ளவேண்டும் என்று கருதுகிறேன். முக்கியமாகத் தம்மிடமிருந்து பிரிந்து சென்று, இப்போது மு.முதலமைச்சரால் மனமுடைந்து நிற்கின்ற அருந்தவபாலன் போன்றோரைப் பிடிவாதம் செய்யாமல், அன்புக் கரம் நீட்டி மீண்டும் தம்முடன் பொருத்திக்கொள்வது அவரது கட்சிக்கு நல்லது. செய்வாரா தெரியவில்லை?

**சல்லடையாரின் சலிப்பு * உலக்கையார் நல்லதுதான் சொல்லுறார். உத ஆர் கேட்கப்போறீனமுங்கோ.**

**3. உரலார் கேள்வி:-** நீங்கள் அடிக்கடி விமர்சிக்கும் சம்பந்தன் ஐயா நோய் வாய்ப்பட்டிருக்கிறாராமே.

**உலக்கையார் பதில்:-** மிகவும் கவலையுறுகிறேன். தலைமையில் உறுதிகாட்டாத அவரது இயல்பைத்தான் நான் கண்டித்து விமர்சிப்பதுண்டு. ஆனால் இன்றைய நிலையில் அவரைப் போன்ற மக்கள் அங்கீகாரத்தைப் பெற்ற, மூத்த, அனுபவம் மிக்க, துணிந்து நம் பிரச்சினையை உலகம் ஏற்கும் வகையில் சொல்லத்தக்க ஓர் தலைவர் இன்று நம் இனத்திற்கு அவசியம் தேவைப்படுகிறார். அந்த இடத்தை நிரப்ப சம்பந்தர் ஐயாவைவிட்டால் வேறெவரும் இல்லை என்றே தோன்றுகிறது. அவர் உடல் நலம் தேறி மீண்டும் நம் இனத்திற்குப் பணியாற்ற வரவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு * உலக்கையார் பதிலில் மானுடம் வென்றதம்மா.**

**4. உரலார் கேள்வி:-** தமிழ் நாட்டில் கலைஞரின் நினைவாக 134 அடி உயரமானதொரு பேனாவைக் கடலுக்குள் நிறுவப் போகிறார்களாமே. அதுபற்றி உங்கள் கருத்து?

**உலக்கையார் பதில்:-** ஒரு செயலைச் செய்கிறபொழுது காலத்தைக் கருத்தில் கொண்டும் செய்ய வேண்டும். இப்போது கலைஞரையும் அவரது எழுத்தாற்றலையும் நம் இனம் நன்கு தெரிந்து வைத்திருக்கிறது. ஒரு மூன்று தலைமுறை கழிய வருவோர்க்குக் கலைஞரை இன்றளவு தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை. அப்போது இந்தப் பேனாவுக்கும் கலைஞருக்குமான தொடர்பு கணிக்கப்படுமா என்பது சந்தேகமே. காலம் கடந்தும் கலைஞரை நினைவூட்ட வேண்டுமானால் அவரது சிலையை நிறுவுவதுதான் பொருத்தம் என்று நினைக்கிறேன்.

இந்த 134 அடி உயரம் என்பதும் கடலுக்குள் நிறுவுதல் என்பதும் ஏற்கனவே கடலுக்குள் நிறுவப்பட்ட 133 அடி உயரமான ஐயன் வள்ளுவர் சிலையுடனான போட்டியையே உணர்த்துகிறது. இது தேவையில்லாத வீண் வேலை. கலைஞர் ஆற்றலாளர்தான். ஆனால் வள்ளுவரைவிட உயர்ந்தவர் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. உயிருடன் இருந்தால் கலைஞரே இம்முடிவை ஏற்றிருக்கமாட்டார் என்பது திண்ணம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை வீரியமாய் முன்னெடுத்துச் சென்ற பெருமையில் கலைஞருக்குப் பெரும் பங்குண்டு என்பதில் ஐயமில்லை. அதனால் ஆட்சியில் இருக்கும் அவரது கட்சி அவரின் சிலையை நிறுவுவதில் தவறில்லை. ஆனால் இத்தனை உயரம், கடலின் நடு என்பதெல்லாம் சற்று மிகையாகவே தோன்றுகிறது. இம் முயற்சி வள்ளுவருக்குப் போட்டி என்கிறார்கள். வள்ளுவர் இனத்தின் அடையாளம். கலைஞர் கட்சியின் அடையாளம். அதை நாம் மறக்கலாகாது.

**சல்லடையாரின் சலிப்பு * தேவையில்லாமல் கலைஞரைச் சர்ச்சைக்கு ஆளாக்கி இருக்கிறார்களுங்கோ.**

**5. உரலார் கேள்வி -** பல்கலைக்கழகத் தமிழ்த் துறைபற்றி அடிக்கடி விமர்சித்து வருகிறீர்கள். அத்துறையினர் என்னதான் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** பல்கலைக்கழகத் தமிழ்த் துறை, பெரும்பாலும் பாலைவனம் ஆகிக் கொண்டிருக்கிறது. அரை நூற்றாண்டு காலமாக என்னென்னவோ சொல்லி என்னென்னவோ செய்துவிட்டு, தனது கடைசிக் காலத்தில், ‘எங்களின் பெயர் சொல்லத்தக்க மாணவர்கள் எவரும் பல்கலைக்கழகத்தில் உருவாகவில்லை’ என்று பகிரங்கமாகச் சொல்லி வருந்திவிட்டுப் போயிருக்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள். அவரது கூற்றை, இன்றுவரை யாரும் பொய்யாக்க முன்வந்ததாய்த் தெரியவில்லை. அதனால் ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகத்தான்’ தமிழ்த்துறையின் கதை இருந்து கொண்டிருக்கிறது.

அறிவுத்துறையில் அறியாமை குற்றமல்ல. அறியாமையை அறியாமைதான் பெருங்குற்றம். நம் தமிழ்த்துறைகளுக்குள் இருக்கும் பலருக்கு அறியாமையை அறியும் விருப்பம் இல்லை. பல்கலைக்கழக முத்திரையை வைத்துத் தங்களை அனைத்தும் அறிந்தவர்களாய்க் காட்டிக்கொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒ.எல்.லில் தமிழ் படித்து, ஏ.எல்.லில் தமிழ் எடுத்து, பல்கலைக்கழகத்தில் தமிழ் செய்கிறார்கள் என்று, மறைந்த பண்டிதர் வீரகத்தி அவர்கள் முன்பொரு முறை கிண்டலாய்ச் சொன்னது ஞாபகத்தில் இருக்கிறது. அதுதான் இன்றுவரை நடந்து கொண்டிருக்கிறது. அதனால்த்தான் அவர்களை அடிக்கடி விமர்சித்து வருகிறேன்.

அங்குள்ள விரிவுரையாளர்கள், பல்கலைக்கழகங்களின் உள் நுழையும் மாணவர்களுக்கு, அந்த ஆராய்ச்சி, இந்த விமர்சனம் என்று ஏதேதோ கற்பித்து, பல்கலைக்கழகக் காலத்தை வீணடித்துவிட்டு, அடிப்படைத் தமிழ் அறிவைத்தானும் சரியாக் கொடுக்காமல் பட்டதாரிகளாய் வெளியே அனுப்புகிறார்கள்.

ஒரு வசனத்தைத் தானும் இலக்கணச் சுத்தமாய், இம் மாணவர்களில் பலருக்கு எழுதத் தெரியவில்லை. இந்தப் பட்டதாரிகள்தான் பாடசாலைகளில் ஆசிரியர்களாகி, இந்த நாட்டுத் தமிழ்க் கல்வியின் தலைவிதியை நிர்ணயித்து வருகிறார்கள். இதனால் நாளுக்குநாள், நம் நாட்டின் தமிழ் அறிவு வீழ்ந்து கொண்டிருக்கிறது.

முன்பு, பண்டிதர் கல்விமுறை இருந்த காலத்தில், சுய ஆற்றல் இல்லாத கடைசிப் பண்டிதரும்கூட, அடிப்படைத் தமிழ் அறிவு முழுவதையும் சரியாகப் பெற்றிருந்தார். அதற்கேற்றாற்போல்த்தான் அவர்களுக்கான பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. அதனால்த்தான் அவர்களிடம் கற்ற ஒரு பரம்பரை தமிழை முறையாகக் கற்றுத் தெளிந்திருந்தது.

ஏதேதோ விடயங்கள் பற்றி எல்லாம் ஆய்வு செய்கிறவர்களுக்குத் தங்களது கல்வித்திட்டம் பற்றி ஆய்வு செய்யத் தெரியவில்லை. பல்கலைக்கழகங்களுக்குள் புகும் மாணவர்களில் ஒவ்வோர் ஆண்டும், ஒரு சிலர்தான் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகும் வாய்ப்பைப் பெறுகின்றனர். மற்ற அனைவருக்கும் பெரும்பாலும் பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆகும் வாய்ப்பே கிடைக்கின்றது. அங்கு இவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் கற்ற(?) விமர்சனங்களும், ஆய்வுகளும் எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை. அங்குள்ள மாணவர்களுக்கு அடிப்படைத் தமிழறிவுப் போதனைதான் தேவைப்படப் போகிறது. அதை முறைப்படி கற்று வெளிவராத பட்டதாரி ஆசிரியர்களால் பாடசாலைகளிலும் தமிழ்க்கல்வி வீழத் தொடங்கியிருக்கிறது.

அப்படியானால், இதற்கு என்ன செய்யலாம்? என்று கேட்பீர்கள். சொல்கிறேன்.

இன்று நமது பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரில், முதலாண்டு முடிவில், தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்க, ஒரு சிலர்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் வெறும் பட்டப்படிப்போடு வெளிவருகிறார்கள்.

அதனால் சிறப்புப் பட்டத்திற்காய் கற்பவர்களை விடுத்து, மற்றவர்களுக்கான பாடத்திட்டத்தை, பிற்காலத்தில் அவர்கள் ஆசிரியர்களாய் ஆகும்போது பயன்படும் வகையில் அமைக்கவேண்டும். ஆய்வு, விமர்சனம் என்று, பிற்காலத்தில் அவர்களின் தொழிலிற்குத் தேவையில்லாத விடயங்களில் அதிக நேரத்தைச் செலவழிக்கச் செய்யாமல், அடிப்படைத் தமிழ் அறிவைஅவர்களுக்கு ஆழமாய்க் கொடுக்கும் வகையில் அவர்களுக்கான பாடத்திட்டத்தை மாற்ற வழி செய்யவேண்டும்.

இப்படிச் செய்யவேண்டியவை இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் செய்ய, மேலிடங்களுக்குத் தம் தேவைகளை உரைத்து புதிய பாடத்திட்டங்களை ஆக்க, முதலில் அத்துறையில் இருப்போர்க்கு ‘முதுகெலும்புப் பலமும்’, தன் எண்ணங்களை வெளிப்படுத்தும் மும்மொழி ஆற்றலும் வரவேண்டும். அன்றைக்குத்தான் நம் மண் தமிழால் பெருமையுறும்.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியார் பொத்திக்குப் புகை அடிச்சுப் பழுக்க வைக்கப் பார்க்கிறாருங்கோ! உதெல்லாம் எங்க நடக்கப் போகுது?**

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னாள் சபாநாயகர் கருவுக்கு 'ஸ்ரீ லங்காபிமானி' கௌரவ விருது





கொழும்பு, பெப். 04

முன்னாள் சபாநாயகரும் நன்மதிப்புக்குரிய அரசியல்வாதியுமான கரு ஜயசூரியவுக்கு 'ஸ்ரீ லங்காபிமானி' கௌரவ விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கரு ஜயசூரிய தேசத்துக்கு ஆற்றிய, சிறந்த சேவையைப் பாராட்டி அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரியவுக்குப் பதக்கம் அணிவித்து விருது வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வின் போது 'கரு ஜயசூரியவின் பெருமைமிக்க வாழ்க்கைப் பயணத்தின் சுவடுகள்' எனும் நினைவுப் புத்தகத்தை ஜனாதிபதியிடம் கரு ஜயசூரிய வழங்கி வைத்தார்.

75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் 'ஸ்ரீ லங்காபிமானி' எனும் கௌரவ விருதானது இலங்கைப் பிரஜை மற்றும் இலங்கையர் அல்லாத ஒருவருக்கு இலங்கை அரசால் வழங்கப்படும் மிக உயர்ந்த தேசிய விருதாகும்.

இந்த விருதை ஒரே நேரத்தில் ஐந்து இலங்கையர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும், அதாவது விருதைப் பெற்ற ஐந்து பேர் உயிருடன் இருந்தால், ஆறாவது நபருக்கு விருதை வழங்க முடியாது. எனினும், விருது பெறுபவரில் ஒருவர் இறந்த பின்னர் புதியவரொருவருக்கு அவ்விருதை வழங்க முடியும்.

2017ஆம் ஆண்டு இலங்கை சங்கீத கலைக்காக டபிள்யூ.டி. அமரதேவாவுக்கு 'ஸ்ரீ லங்காபிமானி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், முன்னாள் ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாஸ, டி.பி. விஜே துங்க மற்றும் ஆதர் சி. கிளார்க், லக்ஸ்மன் கதிர் காமர், ஏ.ரி. ஆரியரத்ன, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், கிறிஸ்டோபர் வீரமந்திரி ஆகியோரும் 'ஸ்ரீ லங்காபிமானி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் இனவாதப் போராட்டமன்றி, தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கும் பணியையே மேற்கொள்ள வேண்டும் – என்று இவ்விழாவில் உரையாற்றிய கருஜயசூரிய தெரிவித்தார்.

75 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைச் சரி செய்து பெருமைமிக்க நாட்டை அடுத்த தலைமுறைக்கு ஒப்படைக்க ஒன்றிணையுமாறு ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் அனைவரிடமும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் முயற்சியின் பலனாக, ஓமல்பே சோபித தேரர் முன்வைத்த நீதி மற்றும் நியாயத்துக்காகத் தனது அரசியல் வாழ்க்கையை அர்ப்பணித்ததாகவும், இந்த 'ஸ்ரீ லங்காபிமானி' தேசிய விருது தான் பின்பற்றிய கொள்கைகளுக்கு வழங்கிய கௌரவமாகும் என்றும் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன, வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சர்கள், ஆளும் கட்சி – எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கரு ஜயசூரியவின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். – என்றுள்ளது.


Jaffna College Institute of Technology

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**

♦ Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)

♦ Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)

♦ Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)

♦ Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**

Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English

Course leads to:

*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**

Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**

♦ குளிருட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic

♦ அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator

♦ மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ

பாடத்திட்டத்தை தழுவியது

Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.

(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க

**Director**

**Jaffna College Institute of Technology**

**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**


## ஊழல் மோசடிகளுக்கு உடந்தையாகவுள்ள உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுகின்றன?

ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் உள்ளூராட்சி சபைகளை உடனடியாக கலைக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சில உள்ளூராட்சி சபைகள் தொடர்பான ஊழல், மோசடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும், அவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சி சபைகள் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக உள்ளூராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களில் பல உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அதற்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளை கலைக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சி சபைகளை கலைப்பது தொடர்பாக ஆளுநர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர் அல்லது மேயர் மாத்திரம் மோசடி மற்றும் ஊழல் செய்திருந்தால் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்றும், முழு சபையின் அங்கீகாரத்துடன் ஊழல் மோசடி இடம்பெற்றிருந்தால், முழு சபையுமே கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தோனியின் பொறுப்புகள் என்மீது விழுந்துவிட்டது

## ஹார்திக் பாண்டியா ஒப்பிட்டுக் கருத்து



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் தோனியின் பொறுப்பு திடீரெனத் தன் மீது விழுந்துவிட்டது என்று தெரிவித்திருக்கிறார் அணியின் தற்போதைய தலைவர் ஹார்திக் பாண்டியா.

”துடுப்பாட்டத்தில் கீழ் வரிசையில் இறங்குவதுகுறித்துபிரச்சனை இல்லை. துடுப்பாட்டத்தில் தோனி செய்ததுபோன்ற பணியை மேற்கொள்வதில் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. அவர் அணியில் இருந்தபோது நான்இளம் வீரராக இருந்தேன். மைதானத்தைச் சுற்றிலும் பந்தைப் பறக்கவிடுவேன்.

ஆனால் அவர் (தோனி), அணியில் இருந்து சென்றுவிட்டார். திடீரென அந்த பொறுப்பு என் மீது விழுந்துவிட்டது. எங்களுக்கு தேவையான முடிவுகள் கிடைக்கிறது. இதனால் நான் மெதுவாக விளையாடுவது குறித்து கவலைப்படவில்லை” என்றார் பாண்டியா.

நியூஸிலாந்து அணிக்கு எதிராக அகமதாபாத்தில் புதன்கிழமை நடைபெற்ற 3ஆவது ரி20 கிரிக்கெட்போட்டியில் 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஹார்திக் பாண்டியா தலைமையிலான இந்திய அணி தொடரை 21 என கைப்பற்றி கோப்பையை வென்றது. தொடர் நாயகனாக ஹார்திக் பாண்டியா தேர்வானார். அவர், இந்தத் தொடரில் 66 ஓட்டங்களை எடுத்ததுடன் பந்து வீச்சில் 5 விக்கெட்களையும் வீழ்த்தி இருந்தார்.

போட்டி முடிவடைந்ததும் 29 வயதான ஹார்திக் பாண்டியா தெரிவித்ததாவது:

உண்மையைக் கூறவேண்டுமென்றால் எப்போதுமே சிக்ஸர் அடிப்பதை ரசிப்பேன். ஆனால் இப்போது நான் கொஞ்சம் மாறிவிட்டேன். நிலைத்து நின்று விளையாடக் கற்றுக்கொண்டுள்ளேன். இதனால் என்னுடைய ஸ்ட்ரைக்ரேட் கொஞ்சம் குறைய நேரிடும்.

இணைப்பாட்டம் மீது எப்போதும் எனக்கு நம்பிக்கை உண்டு. இதையும் கவனத்தில் கொண்டுள்ளேன். எனது அணியினருக்கும் களத்தில் என்னுடன் இருக்கும் வீரருக்கும் அதிக அமைதியையும் குறைந்தபட்சம் நான் இருக்கிறேன் என்ற உறுதியையும் கொடுக்க விரும்புகிறேன்.

இப்போது உள்ள அணியில் அனைத்து வீரர்களையும்விட நான் அதிக போட்டிகளில் விளையாடியிருக்கிறேன். எனவே அனுபவத்தை அறிந்திருக்கிறேன். அழுத்தத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பதை கற்றுக்கொண்டுள்ளேன். மேலும் அழுத்தத்தை எப்படி விழுங்குவது என்றும் அணி அமைதியாக இருப்பதை உறுதிப்படுத்துவது எப்படி என்பதையும் கற்றுக்கொண்டுள்ளேன்.

இதேபோன்று பந்து வீச்சில் புதிய வீரர் ஒருவர் வந்து தொடக்க ஓவரை வீசும் கடினமான பணியை மேற்கொள்வதை நான் விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் அழுத்தத்திற்கு உள்ளானால், நாங்கள் ஆட்டத்தை துரத்த வேண்டிய நிலை உருவாகும். இதனால்தான் ரி20 போட்டியில் முதல் ஓவரை நான் வீசுகிறேன்.

எப்போதுமே அணியை முன்னின்று நடத்த வேண்டும் என்று விரும்புவேன். புதிய பந்தில் எப்படி பந்து வீச வேண்டும் என்பது குறித்து கற்றுக் கொண்டு வருகிறேன். அது எனக்கு உதவுகிறது. இவ்வாறு ஹார்திக் பாண்டியா கூறினார்.

# நியாயமான ஆடுகளம் அமைத்தால் இந்தியத் தொடரை ஆஸி. வெல்லும்

## முன்னாள் வீரர் இயன் ஹீலி கருத்து



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரில் ஆடுவதற்காக இந்தியா வந்துள்ளது. போர்டர்–கவாஸ்கர்கோப்பைஎன்று பெயரிடப்பட்டுள்ள இந்த டெஸ்ட் தொடரில் இந்தியா நியாயமான முறையில் ஆடுகளங்களை அமைத்தால் ஆஸ்திரேலியா தொடரை வெல்லும் என அந்த அணியின் முன்னாள் வீரர் இயன்ஹீலிதெரிவித்தார்.

நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் பெப்ரவரி 9ஆம் திகதி இந்தியாவின் நாக்பூரில் தொடங்க உள்ளது. டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் இரு அணிகளும் ஆடவுள்ளன.

வழக்கமாக இந்திய ஆடுகளங்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடக்கத்தில் துடுப்பாட்டத்துக்கு பெரியளவில் உதவும். அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக சுழலுக்கு சாதகமாக மாறும். அது போன்ற ஆடுகளம் நியாயமான முறையில் அமைக்கப்பட்டால் டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா வெல்லும்.

இந்தியாவில் நடந்து முடிந்த நியூஸிலாந்து தொடரை வைத்து பார்க்கும்போது ஸ்டார்க் மற்றும் நாதன் லியோனை எண்ணி எனக்கு கொஞ்சம் கவலையாக உள்ளது. ஏனெனில் ஆடுகளம் கணிக்கமுடியாத அளவுக்கு பந்துகளை கொண்டு செல்கிறது. இது மாதிரியான சூழலை இந்தியா திறம்பட கையாளும் என அவர் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து அணியுடனான ஒருநாள் தொடரில் முதல் ஆட்டத்தை இழந்த இந்தியா, அடுத்த ஆட்டத்துக்கான ஆடுகளத்தை மிக மோசமானதாகத் தயாரிக்க நிர்ப்பந்தித்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இந்தப் பின்னணியிலேயே இயன் ஹீலி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி இந்த தொடரில் வென்றால் மட்டுமே உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் பங்கேற்று விளையாடும் வாய்ப்பைப் பெறமுடியும். ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. 2004க்கு பிறகு இந்தியாவில் ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை வென்றதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு வந்து டெஸ்ட் தொடரில் விளையாடியபோதும் ஆடுகளம் குறித்த சர்ச்சைகள் எழுந்தன. அப்போது இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர்கள் ‘இது நியாயம் அல்ல’ என சொல்லி இருந்தனர். அவர்கள் தொடரில் சில போட்டிகள் முடிந்த பிறகுதான் அப்படி சொல்லி இருந்தார்கள். ஆனால், இந்தியா – ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே ஹீலி இப்படி சொல்லியுள்ளார்.

# போல்டுக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன

## நியூஸி. கிரிக்கெட் சபை தெரிவிப்பு

நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் டிரெண்ட் போல்டுக்கான கதவுகள் எப்போதும் திறந்தேயிருப்பதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ரி20 லீக் போட்டிகளின் வளர்ச்சி காரணமாக கிரிக்கெட் வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவத்தும் அளிப்பது குறைந்து வருகிறது. நியூசிலாந்து கிரிக்கெட் வாரியத்தில் பிரபல வீரர்களான டிரெண்ட் போல்ட், கிராண்ட்ஹோம், ஜிம்மி நீம், மார்டின் கப்தில் ஆகிய நால்வரும் அந்த நாட்டு கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ளார்கள். ரி20 லீக் போட்டிகளில் விளையாடுவதற்காக கிராண்ட்ஹோம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

33 வயது டிரெண்ட் போல்ட், நியூசிலாந்து அணிக்காக 78 டெஸ்டுகள், 93 ஒருநாள், 44 ரி20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். பணிச்சுமை, குடும்பத்தினருடன் கூடுதல் நேரம் செலவழிக்கவேண்டும் போன்ற காரணங்களால் தன்னை நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்திலிருந்து விலக்கிக் கொள்ளுமாறு கடந்த ஒகஸ்ட் மாதம் கோரிக்கை விடுத்தார். இதனை நியூசிலாந்து கிரிக்கெட் வாரியமும் ஏற்றுக்கொண்டு அவரை விடுவித்தது. இந்த முடிவால் ரி20 லீக் போட்டிகளில் டிரெண்ட் போல்டின் பங்களிப்பு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2022 இந்தியாவின் ஐபிஎல் போட்டியில் ராஜஸ்தான் அணிக்காக 16 ஆட்டங்களில் விளையாடினார்.

இந்நிலையில் 2023 உலகக் கோப்பைப் போட்டி பற்றி நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் தேர்வுக்குழுத் தலைவர் கெவின் லார்சன் தெரிவித்ததாவது: டிரெண்ட் போல்டுக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. தலைமைப் பயிற்சியாளர் கேரி ஸ்டட்டுடன் தொடர்ந்து போல்ட் பேசி வருகிறார். போல்ட்டின் திறமை, அவருடைய பங்களிப்பு பற்றி அனைவரும் அறிவோம். நியூசிலாந்து அணியில் போல்ட் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும் என விரும்புகிறோம்.

அவருடைய சூழலை நாங்கள் புரிந்துகொள்கிறோம். எனவே அவருடன் பேசி அதற்கேற்ற முடிவுகளை எடுப்போம். இந்த வருடம் ஒருநாள் உலகக் கோப்பைப் போட்டி உள்ளது. நட்சத்திரங்கள் ஒன்றானால் எங்களுக்காகத் தொடக்க ஓவர்களை போல்ட் வீசுவார் என நம்பிக்கையுடன் உள்ளேன்–என்றார்.

## வரேனே ஓய்வு

பிரான்ஸ்கால்பந்துஅணியின் நட்சத்திர வீரரான சென்டாபேக் ரபேல் வரேனே சர்வதேச விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக வியாழக்கிழமை அறிவித்தார்.

29 வயதான வரேனே 2018இல் உலகக் கோப்பை வென்ற அணியிலும், 2022 இறுதியாட்டத்தில் விளையாடிய அணியிலும் இடம்பெற்றிருந்தார். அணித் தலைவர் ஹியூகோ லோரிஸ் ஓய்வு பெற்ற நிலையில், அடுத்த அணித் தலைவர் பொறுப்புக்கு ரபேல் நியமிக்கப்படுவார் எனக்கருதப்பட்டது. ஆனால், அவா ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## சுஸந்திகா நியமனம்

இலங்கையில் மகளிா கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் வகையில் கிரிக்கெட் சபையின் மகளிர் பிரிவு ஆலோசகராக முன்னாள் தடகள வீராங்கனையான ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சுஸந்திகா ஜெயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை வரவேற்று, புதிய சவாலை ஏற்கிறேன் என்றாா சுஸந்திகா.

# கவாஜா இந்தியா வந்து சேர்ந்தார்



ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் பங்கேற்கவுள்ளது. இதற்காக அந்த அணி வீரர்கள் இந்தியா வந்துள்ளனர். எனினும் கவாஜா மட்டும் வரவில்லை. நுழைவிசைவு (வீசா) பிரச்சினை காரணமாக அவர் அணியுடன் வரமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. எனினும் சிக்கல்கள் சரி செய்யப்பட்டு வெள்ளிக்கிழமை அவர் இந்தியா வந்து அணியுடன் பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கினார்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் நாகபுரியில் நடைபெறுகிறது. எனினும் பெங்களூரில் பயிற்சிகளை மேற்கொள்ள அந்த அணி முடிவு செய்தது ஆஸ்திரேலிய அணி. உஸ்மான் கவாஜாவைத் தவிர ஆஸி. வீரர்களும் அனைவரும் வியாழக்கிழமை பெங்களூருக்கு வந்தார்கள்.

உஸ்மான் கவாஜா இன்று காலை வந்து அணியுடன் சேர்ந்து கொண்டார். இதனால் முதல் டெஸ்டில் தகுந்த பயிற்சியுடன் கவாஜா பங்கேற்பதில் எந்தவொரு சிக்கலும் தற்போது இல்லை.

காலைக்கதிர்
Kalaikkathir

## மாணவர் பேரணிக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது இனத்தின் கனவுகளைச் சுமந்த இலட்சியப் பயணத்தின் நீட்சிக்கானபடிமமாக, யாழ்ப்பாணப்பல்கலைக் கழக மாணவர்கள், கிழக்குப்பல்கலைக் கழக மாணவர்களோடு இணைந்து முன்னெடுத்திருக்கும் எழுச்சிப் பேரணியானது இன்று காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில் தொடங்கி எதிர்வரும் 07 ஆம் நாள் மட்டக்களப்பு நகரைச் சென்றடையவுள்ளது.

எமது மாணவர்களின் இப்பெரு முன்னெடுப்புக்கு சமூக, மத மற்றும் கட்சி பேதங்களற்று பேராதரவு வழங்க வேண்டிய காலக்கடமை நம் எல்லோருக்கும் உள்ளதை உணர்ந்து, தமிழ்த் தேசியப் பற்றுறுதி மிக்க எமது மக்கள் அனைவரையும் இந்த உணர்வெழுச்சிப் பேரணியில் இணைந்துகொள்ள வேண்டும் என்று பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.

அதேவேளை, இன்று சனிக்கிழமை பிற்பகலில், பேரணி கிளிநொச்சியை வந்தடையவுள்ளது. இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடியும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டும் ஆதரவளிக்கும் அதேவேளை, எமது இனத்தின் இருப்பை நிலைநிறுத்துவது குறித்த சிந்தனையும், சிரத்தையும் மிக்க கிளிநொச்சி வாழ் உறவுகள் அனைவரும் நாளை பி.ப.3.00 மணிக்கு கரடிப்போக்குச் சந்தியில் தொடங்கி இரணைமடுச் சந்தி வரை நீளும் எழுச்சிப் பேரணிக்கு வலுச்சேர்க்குமாறு அன்புரிமையோடு அழைத்து நிற்கிறேன். - என்றுள்ளது.

## 13இன் அமுலாக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருபோதும் இடமளிக்கமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டாம் என மகாசங்கத்தினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழுத்தமாக அறிவுறுத்தியுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு நாட்டில் இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்க வேண்டாம் என மகாசங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகாசங்கத்தினரின் ஆலோசனைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மதிப்பளித்து செயற்படுவார் என எதிர்பார்க்கிறோம். நாட்டுக்கு எதிரான செயற்பாடுகள் தலைதூக்கும்போது மகாசங்கத்தினர் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்க முன்னிற்பது மதிக்கத்தக்கது.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் இந்தியாவின் கடும் அழுத்தத்தினால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டில் போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சேலை உள்ளிட்ட ஆடைகளை இலங்கையர்கள் அணியக்கூடாது எனக் கட்டளை பிறப்பித்தார்கள். ஆனால் அவர்கள் தற்போது 13ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிடுகிறார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் காட்டிக் கொடுப்பை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் என்றார்.

## மக்கள் வாக்கெடுப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதய கம்மன்பில.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தேவையா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் உரிமை நாட்டு மக்களிடம் உள்ளதே தவிர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அந்த அதிகாரம் இல்லை என்றார் அவர்.

தமது கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித் அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு அமைய காணி அதிகாரத்தை வழங்குவதும் மற்றும் 9 மாகாணங்களுக்கும் தனித்தனியான பொலிஸ் ஆணைக்குழுக்களை உருவாக்குதல் ஆகியவை மாத்திரம் எஞ்சியுள்ளன.

மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும்போது இலங்கை இயல்பாகவே சமஷ்டியாட்சி முறையிலான நாடாக இலங்க அங்கீகரிக்கப்படும்.

69 இலட்ச மக்கள் சுபீட்சமான கொள்கை திட்டத்தை ஏற்றுக்கொண்டே ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியை உருவாக்கினார்கள்.

கோட்டாபய சுபீட்சமான இலக்கு கொள்கை திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பதிலாக 'பஷில் ராஜபக்ஷ இலக்கு' கொள்கை திட்டத்தை அமுல்படுத்தியதால் நாட்டு மக்கள் ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபயவை விரட்டியடித்தார்கள்.

கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களின் ஆதரவினால் தெரிவு செய்யபட்டார். சுபீட்சமான இலக்கு கொள்கை திட்டத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிடப்படவில்லை.

அரசியல் திருத்தங்களுக்குப் பதிலாக புதிய அரசமைப்பை உருவாக்குவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே மக்கள் பொதுஜன பெரமுன தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். ஆகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குக் கிடைக்கப்பெற்ற மக்களாணையுடன்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது பதவி வகிக்கிறார், ஆகவே அவர் சுபீட்சமான கொள்கை திட்டத்திற்கு அப்பாற்பட்டு செயற்படகூடாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் பிரதிநியல்லர் என்பதால் இதன் பாரதூர தன்மையை அறிந்துக்கொள்ளும் தேவை அவருக்கு இல்லை.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதே தனது முக்கிய பொறுப்பு என ஜனாதிபதி குறிப்பிட்டார். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண இவர் கடந்த ஆறு மாத காலமாக எதனையும் செய்யவில்லை.

பேச்சளவில் மாத்திரம் மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் இல்லாத பிரச்சினையை தோற்றுவிப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்க்க வேண்டும் - என்றார்.

## ரணிலின் கொள்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

09ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூட விருக்கின்றது. கடந்த கூட்டத்தொடரின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய சில பணிகளைத் தொடர்ந்து ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் தொடங்கும். மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

மறுநாள் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரண்டாவது நாளாகவும் அது தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.



நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 20 வெள்ளிக்கிழமை 03.02.2023 கதிர் 338

## தனுஸ்கோடிக் கரையில் ஒதுங்கிய இலங்கை படகு

(ந.லோகதயாளன்)



இலங்கைப் பதிவு எண்ணுடன்கூடிய படகு ஒன்று இந்தியாவின் தனுஸ்கோடியில் கரை ஒதுங்கியுள்ளது. 2

# பொருளாதார வீழ்ச்சிக்கு மஹிந்த பொறுப்பல்லவாம்



## கோட்டாவையே சாடுகின்றார் நாமல்

கோட்டாபய அரசில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்களில் மஹிந்த ராஜபக்ச சம்பந்தப்பட்டிருக்கவில்லை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மஹிந்த பொறுப்புக்கூறத் தேவை இல்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார். 2

## பெப்ரவரி 22, 23, 24 இல் தபால் மூல வாக்களிப்பு

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திக திகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெப்ரவரி 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் என்று 2

## சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கவேமாட்டேன்

### சஜித் பகிரங்கமாகத் தெரிவிப்பு



அரசால் நடத்தப்படுகின்ற சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், சுதந்திர தின நிகழ்வுக்குப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டதற்கு எதிர்ப்பை வெளியிடும் 2

## அதிகாரப் பகிர்விற்கு மகாநாயக்கர்களே தடை

### நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் குற்றச்சாட்டு

அன்று பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு காரணமான மகாநாயக்கர்களே, இன்று மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் விடயத்திலும் தடையாக இருக்கின்றார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் விசனம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்கர்களை சந்தித்தபோது மாகாண சபைகளுக்கு 9

## மார்ச் 9 இல் தேர்தல் நிச்சயம்; பரப்புரைக்கு தயாராகுங்கள்



### ‘மொட்டு’வினருக்கு பஸில் உத்தரவு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நிச்சயம் நடத்தப்படும். அதனை எதிர்கொள்வதற்குத் தயாராகுங்கள்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச, கட்சியின் அனைத்து தொகுதி 2

### இராணுவத்தின் பிடியிலிருந்து

## வலி. வடக்கில் 108 ஏக்கர் காணி சம்பிரதாயபூர்வமாக விடுவிப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த 108 ஏக்கர் காணிகள் சம்பிரதாயபூர்வமாக விடுவிக்கப்பட்டன. காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பான ஆவணத்தை யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி சுவர்ண போதொட்ட யாழ். மாவட்டச் 2



## தந்தையைத் தாக்கி கொலைசெய்த மகன்

### நுவரெலியாவில் கொடூரம்

தனது தந்தையை மகன் பொல்லால் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் நுவரெலியா – கந்தப்பளையில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான குமாரவேல் தியாகபிரகாஸ் (வயது 45) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். 2



## சுதந்திர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் சஜித் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெருமவும், சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளார்.

## தந்தையைத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய போது தனது தந்தையைத் தானே தாக்கிப் படுகொலை செய்தார் என்று பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கிய மூத்த மகனை கந்தப்பளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், அயல் வீட்டார் இருவரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் கந்தப்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பெப்ரவரி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதியன்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது.

இதற்கிடையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கோரியும், நடத்தக்கூடாது என்று கோரியும் உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மனுக்கள் மீதான தீர்ப்பு எதிர்வரும் 10ஆம் திகதியன்று உயர்நீதிமன்றத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

## மார்ச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

## வலி.வடக்கில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர் அ.சிவபாலசுந்தரனிடம் கையளித்தார். பலாலி அன்ரனிபுரம் பகுதியில் மாலை 3 மணியளவில் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அந்த விடுவிப்பு அறிவித்தல் பத்திரத்தை மேடையில் வைத்தே தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவசிறியிடம் ஒப்படைத்தார்.

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், குறித்த காணிகள் பொதுமக்களிடம் திருப்பிக் கையளிக்கப்படவுள்ளன.

நிகழ்வில் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்றஉறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, ஜனாதிபதியின்மேலதிகசெயலாளர்இளங்கோவன், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள்,யாழ்ப்பாணமாவட்டசெயலகஅதிகாரிகள்,காணிகளின்உரிமையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## பொருளாதார ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலிமுகத்திடல் போராட்டத்தால் மஹிந்த ராஜபக்சவின் பெயருக்கு ஏற்பட்ட சேதம்தான் எங்களுக்குக் கவலை. அவருக்கு அந்த நிலை ஏற்பட்டிருக்கக் கூடாது.

கோட்டாபய அரசில் பல தீர்மானங்களில் மஹிந்த சம்பந்தப்பட்டிருக்கவில்லை. பொருளாதாரவீழ்ச்சி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் அவர் பொறுப்புக்கூறத் தேவை இல்லை. அதுதான் அரசியல். நல்ல விமர்சனங்களை மட்டும் எதிர்பார்க்கக்கூடாது. அப்படியானவர்களால் அரசியல் செய்ய முடியாது. எமது அரசியல் வரலாற்றில் இவ்வாறான பல நிகழ்வுகளை நாம் கடந்து வந்துள்ளோம்.

இவ்வாறான எல்லா சவால்களையும் எதிர்கொள்ள நான் தயார். நல்லாட்சியிலும் நான் பல சவால்களை எதிர்கொண்டேன். என்னை மூன்று தடவைகள் சிறையில் போட்டார்கள்.

எம்மை அடித்து – கொலை செய்து – வீடுகளுக்குத் தீ வைத்து – அச்சமூட்டி எமது அரசியல் பயணத்தை நிறுத்த முடியாது. அரசியல் அதிகாரம் இருப்பது மக்களின் கைகளில். நாங்கள் அரசியலில் இருக்க வேண்டுமா, இல்லையா என்று அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். காடைத்தனம் ஊடாக எம் அரசியல் பயணத்தைக் தடுக்க முடியாது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியடைந்தே தீரும் – என்றார்.

## தனுஸ்கோடி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக பொலிசார் இது தொடர்பில் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையின் சிலாபம் பகுதி பதிவினைக்கொண்டபடகேதனுஸ்கோடியில் இயந்துரத்துடன் கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகு பழுது மற்றும் இயற்கை இடர் காரணமாக கரைஒதுங்கியதா அல்லது படகில் வந்தவர்கள் அதனைக் கைவிட்டு தமிழ் நாட்டுக்குள் தப்பிச் சென்றனரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப் படுத்தியிருக்கின்றனர்.

## அதிகாரப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களை வழங்கக் கூடாது என்று அவர்களால் வலியுறுத்தப்பட்டது தொடர்பில் இன்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தொடர்ந்து 75 ஆண்டுகளாக இனப்பிரச்சனைக்கான தீர்வுகளை எட்டுவதற்கான பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

பல பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. அவை அனைத்தும் பேரினவாத சக்திகளினால் தோற்கடிக்கப்பட்டே வந்திருக்கின்றன. அந்த வரிசையில் தற்போது 13ஆவது திருத்தத்தைகூட முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடாது எனும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இலங்கை அரசிடமிருந்து தமிழர்களுக்குத் தீர்வு கிட்டாது என்பதும், உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலமாக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதும் சர்வதேச பொறிமுறை ஒன்றுதான் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேவழி என்பதும் மகாநாயக்கர்களின் இந்த கருத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கும், தற்போது மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்கும் விடயத்திலும் இதே மகாநாயக்கர்கள் தான் தடையாக இருந்தார்கள்; இருக்கின்றார்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# அரகலயவினர் 13 குறித்து தெளிவுபடுத்தவேண்டும்

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோன் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க சொல்லப்போக அது இப்போது தெற்கில் கடும் எதிர்ப்பைக் கிளப்பி வருகின்றது. தீவிரப் போக்குடைய, இனவாத அடித்தளத்தில் அரசியல் செய்யக்கூடிய வர்களும் பிக்குகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.**

**இலங்கையின் சுதந்திர நாளான நாளைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரப்படும் என்று திடீரென்று அறிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. அதனைப் பிடித்துக் கொண்ட தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கேள்வி எழுப்பப் போக நாடாளுமன்றத்திலும் அதனை வழிமொழிந்தார் ரணில். அதனடிப்படையில் மூன்று தடவைகள் அனைத்துக் கட்சித் தலைவர்கள்கூட்டத்தைநடத்தினார். ஓரிருதடவைகள் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களுடன் பேசினார். மேலும் சில தடவைகள் தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்கள் அனைவருடனும் பேசினார்.**

**இவற்றிலெல்லாம் அவரிடம் வலியுறுத்தப்பட்ட விடயம், ஒரு நிரத்தரத் தீர்வை இவ்வளவு குறுகிய காலத்திற்குள் காண்பது கடினம், அதனால் இந்தக் காலப் பகுதிக் குள் குறைந்தது அரசமைப்புச் சட்டத்தில் ஏற்கனவே உள்ளவற்றையாவது முழுமையாக நடைமுறைப்படுத்தங்கள் என்பதாக இருந்தது. இலங்கை வந்த இந்திய அயலு றவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் அதனை வலியுறுத்திப் போனார். இதைய டுத்து ரணில் 13ஐ முழுமையாக நிறை வேற்றப் போகின்றேன் என்பதாகத் தான் கடைசியாகக் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார்.**

**அதனைப் பிடித்துக்கொண்ட ஒரு தரப்பினர் தீவிரமாக எதிர்த்து வருகின்றனர். ரணில் 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தினால் அதற்கெதிராகப் போராட்டம் வெடிக்கும் என்று எச்சரிக்கின்றனர். இந்தத் தருணத்தில் அரகலயவினரின் இது தொடர்பான கருத்து என்ன என்பதை அறிய தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.**

**அரகலய போராட்டத்தின்போது புதிய அரசியல் பாதையை வகுப்போம் என்று அறைகூவல் விடுக்கப்பட்டது. இன, மத, மொழி பேதங்களைக் கடந்து இந்த நாட்டின் இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைகின்றனர் என்று முழக்கமிடப்பட்டது. அத்தகைய முற்போக்கான போராட்டத்தை நடத்தியவர்கள் இன்று தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாட்டில் நிலவிவரும் கலந்துரையாடலில் தமது நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும்.**

# சகல மக்களுக்கும் சகல உரிமைகளும் கிடைக்கவேண்டும் என்கிறார் அங்கஜன்

## சுதந்திர தினத்தில் அதை உறுதிசெய்யவும் கேட்கிறார்



தென்மராட்சி, ஜன. 3

நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் சம உரிமை கிடைப்பதனை இந்த சுதந்திர தினத்தில் உறுதி செய்யுங்கள் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நாட்டினுடைய 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:

ஓர் நாட்டினுடைய சுதந்திர தினம் ஒரு தரப்பு மக்களுக்கு மகிழ்வானதாகவும்-அதேசமயம் நாட்டினுடைய மற்றொருபகுதிமக்களுக்குவேதனைக்குரிய நாளாகவும் அமைவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

காலணித்துவத்தில் இருந்து மீண்டு 75வருடங்கள் கடக்கின்றன. அதேசமயம் உள்நாட்டு போர் மௌனித்து 13வருடங்கள்கடக்கின்றன.இருப்பினும் இன்றுவரை எம் மக்கள் சுதந்திரக் காற்றினைசுவாசிக்கமுடியாதவர்களாக உள்ளனர்.

எம் மக்கள் இழந்தவை ஏராளம்.அதற்கு ஈடு இணை கிடையாது. இருப்பினும் அவர்கள் வீழ்ந்த இடத்தில் இருந்து மீண்டு வருவதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டியது அனைவரதும் கடமை.

வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலைஎனபலஎதிர்பார்ப்புக்களோடு காத்துக்கிடக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புக்களில் பெரும்பகுதி இன்னமும் ஈடேறாதவையாகவே காணப்படுகின்றன.

இது ஒருபக்கம் இருக்க மத ரீதியாகஎம்மக்களுடையநம்பிக்கைகளை சிதைக்கும் செயற்பாடும் இன்னொரு பக்கம் இடம்பெற்று வருகிறது.

சுதந்திரத்தை நாட்டின் ஓர் பகுதியினர் மாத்திரமன்றி அனைத்து மக்களும் அனுபவிக்க வழிசமையுங்கள் – என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 ஆயிரம் படை வீரர்களின் மரியாதை அணிவகுப்புடன் சுதந்திர தின நிகழ்வு!

நாட்டின் 75 ஆவது சுதந்திர தின விழா சனிக்கிழமை கொழும்பு – காலி முகத்திடலில் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 6 ஆயிரம் பாதுகாப்பு படை வீரர்களின் மரியாதை அணி வகுப்பு இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 7 மணிக்கு சர்வமத வழிபாடுகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமானதையடுத்து , 7.30 மணிக்கு படை வீரர்களின் மரியாதை அணிவகுப்பும் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 8.15 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண்மணி மைத்திரி விக்கிரமசிங்க நிகழ்வில் கலந்து கொள்வர். முற்பகல் 10.30 மணி வரை மரியாதை அணி வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

மரியாதை அணிவகுப்புக்களில் முப்படையினர் , பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் , ஓய்வு பெற்ற முப்படை வீரர்கள், அங்கவீனமுற்ற முப்படையின் முன்னாள் வீரர்கள், தேசிய மாணவர் படையணி என்பவற்றைச் சேர்ந்த 6 ஆயிரத்து 410 படை வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர்நாயகம்பற்றீஸியாஸ்கொட்லண்ட் உள்ளிட்ட 400 இராஜதந்திரிகள் கலந்துகொள்ளவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவது இடை நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் 3 ஆண்டுகளின் பின்னர் இம்முறை தமிழிலும் தேசிய கீதம் பாடப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இதே வேளை சுதந்திர தினமான 04 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக இடம்பெறும் ஜனாதிபதியின் விசேட உரை நிகழ்த்தப்பட மாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. எனவே சனிக்கிழமை மாலை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நமோநமோதாயே–நூற்றாண்டை நோக்கி அடியெடுத்து வைப்போம்' என்ற தொனிப் பொருளின் கீழ் 75 ஆவதுசுதந்திரதினவைபவம்இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எம்பிலிப்பிட்டிய நீதிமன்றிலிருந்த 2 மோட்டார் சைக்கிள்கள் திருட்டு!

*எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றிலிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என எம்பிலிப்பிட்டிய தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் காணாமல்போனமை தொடர்பில் எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்ற பதிவாளர் முறைப்பாடு செய்துள்ளார் என அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் திருடிச் சென்றவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய தலைமையக பொலிஸாரின் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் குழு மேற்கொண்டு வருகின்றனர்.*

# 5 லட்சம் பேர் பிரிட்டனில் நேற்று வேலை நிறுத்தம்




சம்பள உயர்வு கோரி போராட்டம்

சம்பள உயர்வு உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத் தி பிரிட்டனில் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பிரிட்டனில் கடந்த சில மாதங்களாக விலைவாசி அதிகரித்து வருவதால், பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக இரு தலைமை அமைச் சர்கள் அங்கு பதவி விலகியிருக்கின் றனர். தற்போது ரிஷி சுனக் தலைமை அமைச்சராகப் பதவி வகித்து வரு கிறார்.

இந்த நிலையில் ஓய்வூதியம், சம்பள உயர்வு, பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலி யுறுத்தி செவிலியர்கள், தொடருந்து ஓட்டுநர்கள், வானூர்திப் பணியாளர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரைவுரையாளர்கள், அரசு ஊழியர்கள் என 5 லட்சத்துக்கும் அதிகமானோர் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.


இந்த வேலைநிறுத்தம் இடையூறுகளை ஏற்படுத்தும் என்று தலைமை அமைச்சரின் அலுவ லகம் எச்சரிக்கை விடுத்திருந்தது. திட்டமிட்டபடி போராட்டம் நடைபெற்றதால் பிரிட்டனில் ஆயிரக்கணக்கான பாடசாலைகள் மூடப்பட்டன. இங் கிலாந்து மற்றும் வேல்ஸில் சுமார் 85 சதவீத பாடசாலைகள் பாதிப்பைச் சந்தித்தன.

லண்டனில் வேலைநிறுத்தத் தில் ஈடுபட்ட தொழிலாளர்களுடன் இணைந்த முன்னாள் தொழிற்கட்சித் தலைவர் ஜெரமி கோர்பின், வரிவிதிப்பு முறை நியாயமானதாக இருக்கவேண்டும் என்று வலியு றுத்தினார்.

சமத்துவமின்மை மிகப் பெரிய அளவில் அதிகரித்துவிட்டது.

இதனை நாடு தாங்காது. பிரிட்டனில் முன்பைவிட கோடீஸ்வரர்கள் அதிகரித்துவிட்டனர். கோவிட் காலத்தில் கோடீஸ்வரர்கள் நிறைய பணம் சம்பாதித்தனர். அதற்கு ஏற்ப அவர்களுக்கு வரி விதிக்கப்பட வில்லை என அவர் குற்றஞ்சாட்டினார்.

## சிறிய ரக மின்சார வானூர்தியை பயன்பாட்டுக்கு விடுகிறது நாசா



அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, சிறிய ரக மின்சார வானூர்தி ஒன்றை, இந்த ஆண்டு முதல் முறையாகப் பறக்கவிடவுள்ளது.

இத்தாலியின் டெக்னம் பி 2006டி வானூர்தியை மாற்றியமைத்து பரிசோதனை முயற்சியாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த விமானம் லித்தியம் பற்றரியால் இயங்கக்கூடியது. இந்த வானூர்திக்கு எக்ஸ்-57 என பெயரிடப்பட்டுள்ளது. இதன் இறக்கையில் 14 புறொபல்லர்கள் பொருத்தப்பட்டுள்ளன. 4 இருக்கைகள் கொண்ட சிறிய வானூர்தி இது.


இந்த வானூர்தியில் இறக்கைகள் மிக நீளமாக உள்ளன. இவற்றை தேவையற்ற நேரத்தில் மடித்துக் கொள்ள முடியும் என நாசா தெரிவிக்கின்றது. வழக்கமான பெட்ரோலிய எரிபொருளைப் பயன்படுத்தும்போது, எரிபொருள் தீர தீர, விமா னத்தின் எடை குறையும். மின்சாரத்தில் இயங்கும்போது அப்படி நடக்காது.

பற்றரியில் இருந்து கிடைக்கும் சக்தி அதன் எடை மற்றும் அளவைப் பொறுத்து மாறுபடும். அதிலிருந்து கிடைக்கும் சக்தியும், வழக்கமான விமான எரிபொருளில் இருந்து கிடைக்கும் சக்தியைவிட 50 மடங்கு குறைவாகவே உள்ளது.

தற்போது குவாண்டம் தொழில்நுட் பத்தில் பற்றரிகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றை வேகமாக சார்ஜ் செய்ய முடியும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பற்றரிகளில் லித்தியம் தயாரிப்புக்கள் தான் சிறப்பானவையாக உள்ளன. ஆனாலும் அவற்றின் எடை அதிகமாக உள்ளது. லித்தியம் எளிதில் தீப் பிடிக்கக் கூடியதால், அது தீங்கு விளைவிக்கும் அபாயமும் உள்ளது.

நாசா உருவாக்கியுள்ள எக்ஸ்-57 மின்சார விமானத்தில் 160 கி.மீ. தூரம் வரை பறக்கலாம். இதற்கு ஒரு மணி நேரம் ஆகும். பரிசோதனை முயற்சியாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த மின்சார விமானம் இந்த ஆண்டு பறக்க விடப் படவுள்ளது.

## பாக். முன்னாள் அமைச்சர் வீதியில் சென்றபோது கைது



பாகிஸ்தான் முன்னாள் உள்துறை அமைச்சரும் அவாமி முஸ்லிம் லீக் கட்சியின் தலைவருமான கேர் ஷீத் அகமது கைது செய்யப்பட்டார்.

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். சாலையில் சென்றுகொண்டி ருந்த போது அவர் கைது செய்யப்பட்டார் எனவும், அவரது வாகனத்தில் இருந்து மதுப் போத்தலும், ஆயுதங்க ளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், கைது செய்யப்பட்டபோது கே் ரஷீத் அகமது போதையில் இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்னர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் ஆதரவாளரான இவர், சமீபத்தில் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தார். அதில், இம்ரான் கானை கொலை செய்ய முன்னாள் அதிபர் ஆசிப் அலி சர்தாரி திட்டமிட்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டி இருந்தார். இதையடுத்து, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ராவல்பிண்டி நகர பொறுப்பாளர், கே் ரஷீத் அகமதுவுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்திருந்தார். அதன் அடிப்படையில் கே் ரஷீத் அகமது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட கே் ரஷீத் அகமது, இஸ்லாமாபாத்தில் உள்ள ஆபரா காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படார். பின்னர், மருத்துவ பரிசோதனைக்காக அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தனது கைது குறித்து கருத்து தெரிவித்துள்ள கே் ரஷீத் அகமது, தான் எவ்வித குற்றத்தையும் இழைக்கவில்லை என்றும், இம்ரான் கானுக்கு ஆதரவாக இருப்பதால்தான் தான் குறிவைக்கப்படுகிறார் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே, செய்தியாளர்களிடம் பேசிய கே் ரஷீத் அகமதுவின் செய்தித் தொடர்பாளர், பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கே் ரஷீத் அகமதுவின் வீட்டில் இருந்துதான் அவர் கைது செய்யப்பட்டார் என்றும், நெடுஞ்சாலையில் அல்ல என்றும் தெரிவித்துள்ளார். நள்ளிரவு 12.30 மணி அளவில் வீட்டிற்கு வந்த சுமார் 300 பொலிஸார் அதிரடியாக ரஷீத்தை கைது செய்தனர் எனும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய இராணுவத்தை விட்டு விலகியவர் நேர்காணல்

# உக்ரைனில் ஒவ்வொரு நாளும் மக்கள் கொல்லப்படுகின்றனர்

### பாலியல் துன்புறுத்தலும் தொடர்கிறது

போரில் உக்ரைன் மக்கள் கொல்லப்பட்டனர், பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டனர் என முன்னாள் ரஷ்ய இராணுவச் சிப்பாய் ஒருவர் தெரிவித்திருக்கிறார். கோன்ஸ்டான்டின் எ∴ப்ரெமோவ் என்ற அந்தச் சிப்பாய், ரஷ்யா – உக்ரைன் போரில் உக்ரைன் படைகளோடு போரிட்டவர். தற்போது அவர் போர்க்களத்திலிருந்து விலகியுள்ளார். அவரை துரோகி என்று ரஷ்யா அடையாளப்படுத்துகிறது.

இந்த நிலையில், பிபிசி-க்கு கோன்ஸ்டான்டின் அளித்த நேர்காணலில், போரில் உக்ரைன் ஆண்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர். இந்தக் கொடுமைகள் வாரம் முழுவதும் நடக்கும். தினந்தோறும் உக்ரைன் மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

உண்மையைக் கூறவேண்டும் என்றால், எங்களில் பலருக்கு இது போர் என்றே தெரியவில்லை. நாங்கள் பயிற்சி என்றுதான் முதலில் நினைத்தோம். இதில் எனக்கு விருப்பமில்லை. நான் வெளியேற முடிவு செய்தேன். நான், எனது படைத் தளபதியிடம் சென்று எனது நிலையை விளக்கினேன். அவர் என்னை 'துரோகி , கோழை' என்று விமர்சித்து மூத்த அதிகாரிகளிடன் அழைத்துச் சென்றார்.

அதன் பின்னர் நான் எனது ஆயுதங்களை விட்டுவிட்டு, ஒரு டாக்ஸியில் ஏறி புறப்பட்டேன். பின்னர் செச்சினியாவில் உள்ள எனது தளத்திற்குத் திரும்பி வந்து அதிகாரபூர்வமாக வேலையைவிட விரும்பினேன். ஆனால், என் நண்பர்கள் என்னை எச்சரித்தனர்.

ஒரு கேணல் என்னைத் தப்பியோடியதற் காக 10 ஆண்டுகள் வரை சிறையில் அடைப்பேன் என்று கூறினார் என்று அந்தப் பேட்டியில் கோன்ஸ்டான் டின் கூறியுள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் இணைய உக்ரைன் முடிவெடுத்தது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடனும் உக்ரைன் நெருக்கம் காட்டியது. இந்த நடவடிக்கைகளால் தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறி, உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடுத்தது. தொடர்ந்து உக்ரைன் – ரஷ்யா போர் நடைபெற்று வருகிறது. போர் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

# தேர்தல் முடிவடைந்து 21 நாள்களுக்குள் செலவு விவரம் சமர்ப்பிக்கவேண்டும்

## தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தல்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் ஒரு வாக்காளருக்கு 20 ரூபாவும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒரு தேர்தல் தொகுதியின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை 20 ரூபாவால் பெருக்கி வரும் தொகையில் 60 சதவீதத்தையும் செலவிட வேண்டும்.

தேர்தல் முடிவடைந்து 21 நாள்களுக்குள் வேட்பாளர்கள் அனைவரும் தேர்தலுக்கு செலவு செய்த நிதி தொடர்பான தகவல்களை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுமாயின் தேர்தலில் வெற்றி பெற்றவரின் அரசியல் பதவி இரத்து செய்யப்படும், தோல்வியடைந்தவர் மூன்று ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

தேர்தல் செலவீனம் ஒழுங்குப்படுத்தல் சட்டம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் தேர்தல் செலவுகளைக் கண்காணிக்கும் வழிமுறை காணப்பட்டது. தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட்டதை தொடர்ந்து ஒரு வேட்பாளர் தேர்தல் வெற்றிக்காக எவ்வளவு செலவு செய்யலாம் என்ற நிலை காணப்பட்டது. விருப்பு வாக்கு முறைமை தேர்தல் செலவுகளையும், அரசியல் கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

விருப்பு வாக்கு முறைமையைக் கொண்டு ஒரு வேட்பாளர் அதிக நிதியை தேர்தலுக்காக செலவு செய்கிறார், இதனால் முறையற்ற அரசியல் நிர்வாகக் கட்டமைப்பு தோற்றம் பெறும். தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என சகல தரப்பினரும் வலியுறுத்தினர்.

தேர்தல் செலவீனம் ஒழுங்குப்படுத்தல் தொடர்பாக சட்ட வரைவு 2019 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அதற்கு அமைச்சரவை இருமுறை அனுமதி வழங்கியது, இருப்பினும் பல்வேறு காரணிகளால் நிறைவேற்றப்படவில்லை.

அரசியல் நிலைமை தொடர்பாக நாட்டு மக்கள் முழுமையாக கவனம் செலுத்தியுள்ள பின்னணியில் குறுகிய காலத்துக்குள் தேர்தல் செலவீனம் ஒழுங்குப்படுத்தல் சட்டம் கடந்த மாதம் 19 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் செலவீனம் ஒழுங்குப்படுத்தல் சட்டம் உருவாக்கப்பட்டு ஐந்து நாள்களுக்குள் தேர்தல் செலவுகள் தொடர்பான தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டும் என்ற திருத்தம் சட்டத்தில் உள்வாங்கப்பட்டது.

இதற்கமைய கடந்த மாதம் 24, 25 தேர்தல் நிர்வாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் கடந்த மாதம் 24 ஆம் திகதி 339 சுயேச்சை வேட்பாளர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை மேற்கொண்டனர். அன்றைய தினம் அங்கீகரிக்கப்பட்ட 58 அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் தேர்தல் தலைமையகத்தில் விசேட பேச்சு இடம்பெற்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஒரு வேட்பாளர் ஒரு வாக்காளருக்கு 300 ரூபா செலவு செய்ய வேண்டும் என ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை.

பல்வேறு கட்டப் பேச்சுகளை தொடர்ந்து ஒரு வேட்பாளர் வாக்காளர் ஒருவருக்கு 15 ரூபா செலவு செய்ய அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் இணக்கம் தெரிவித்தனர், இந்தத் தீர்மானத்தை ஆணைக்குழு பரிசீலனை செய்து அந்தத் தொகையை 20 ரூபாவாக நிர்ணயித்தது.

இதற்கமைய ஒரு சுயேச்சை வேட்பாளர் ஒரு வாக்காளருக்கு 20 ரூபா செலவு செய்ய வேண்டும், அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒரு தேர்தல் தொகுதியில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை 20 ரூபாவால் பெருக்கி, வரும் தொகையில் 60 சதவீதத்தை அந்த தேர்தல் தொகுதிக்காக செலவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் பெறுபேறு வெளியாகி 21 நாள்களுக்குள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் தேர்தலுக்கு செலவான நிதி மற்றும் அந்த நிதியை திரட்டிக் கொண்ட விதம் தொடர்பான தெளிவான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். வேட்பாளர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பகிரங்கப்படுத்தப்படும். குறித்த தகவல்களை இலங்கை பிரஜைகள் அனைவரும் பெற்றுக் கொள்ள முடியும்.

வேட்பாளர் ஒருவருக்கு அவரது அனுசரணையாளர்கள் செலவு செய்யும் நிதி தொடர்பில் குறித்த வேட்பாளர் பொறுப்புக் கூற வேண்டும்.

பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்தால் தேர்தலில் வெற்றிப் பெற்ற ஒருவரின் அரசியல் பதவி பறிக்கப்படும். அத்துடன் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஒருவர் செலவு தொடர்பில் பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்திருந்தால் அவர் மூன்று வருடங்களுக்கு எந்த தேர்தலிலும் போட்டியிடத் தடை விதிக்கப்படும்.

போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள் தேர்தலுக்காக செலவு செய்யும் நிதி, பிரசார நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும், சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் அங்கிகரிக்கப்பட்ட தனியார் கணக்காய்வு தரப்பினர் ஊடாக பரிசீலனை செய்யப்படும். – என்றார்.

# சுதந்திரதின கொண்டாட்டங்களை ஏற்கும் மனநிலை மக்களுக்கில்லை!

## நாலக கொடஹேவா சுட்டிக்காட்டு



பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேசத்திடம் யாசகம் பெற்று சுதந்திர தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாட வேண்டுமா? சுதந்திர தின கொண்டாட்டங்களை ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் நாட்டு மக்கள் இல்லை, அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரசாங்கத்தின் வரி சீர்த்திருத்த கொள்கையால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாதம் ஒரு லட்சம் சம்பளம் பெறும் அந்த சம்பளத்தின் ஊடாக வீட்டுக் கடன், வாகன கடன் ஆகியவற்றை சமாளித்து வந்த நிலையில் அரசாங்கம் ஒரே கட்டமாக வரி கொள்கையை அமுல்படுத்தியுள்ளதால் மோசமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உயர் சம்பளம் பெறும் துறைசார் நிபுணர்களுக்கு வெளிநாடுகளில் அதிக கேள்வி காணப்படும் நிலையில் அவர்கள் நாட்டுக்காக சேவையாற்றினார்கள். அரசாங்கத்தின் முறையற்ற வரி கொள்கையால் துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்துமே தவிர மேம்படுத்தாது.

குறுகிய காலத்தில் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான நிபந்தனையாக உள்ளது. அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு கடுமையான முறையில் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச செலவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 20 கோடி ரூபா சர்வதேசத்திடம் யாசகம் பெற்று சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டுமா? சுதந்திர தினத்தைக் கௌரமாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் நிலையில் நாட்டு மக்கள் இல்லை. அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அக்கிராசன உரையாற்ற வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் 50 இற்கும் அதிகமான நாடாளுமன்ற குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற குழுக்களை மீண்டும் நியமிக்க வேண்டுமாயின் பாரிய நிதி செலவாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச செலவுகளைக் கட்டுப்படுத்த எவ்வித நட வடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை மாறாக நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்து நாடாளுமன்ற செலவுகளை பல மடங்கு பெருப்பித்துள்ளார்.

# நீர் வழங்கல் தொடர்பாக அமைச்சர் ஜீவன் ஆய்வு!

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊடாக 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் அத்தோடு அந்தத்திட்டங்களின் குறைபாடுகளை இனம் கண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அதேபோன்று 2023 ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக நீர்வழங்கல் சபையின் அதிகாளால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதன்போது அங்கு அதிகாரிகளுடன் உரையாடிய அமைச்சர், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் பல்வேறு அரச துறைசாந்த நிறுணங்களில் பல்வேறு போராட்டங்களில் முன்னெடுத்தென ஆனால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொதுமக்களுக்கு உயர்தர சேவை சுத்தமான குடிநீரை வழங்குவதே நமது நோக்கமாக கொண்டு செயற்பட்டது.

மேலும் அமைச்சுக்களின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் அதிகாரிகளினதும் பூரண ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் இந்த இலக்கை அடைய அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டுமென அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கீழ் இயங்கும் தொழில் சங்க பிரதநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினார் இதன்போது அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் பல்வேறு கோரிக்கைகளையும் அமைச்சரிடம் முன்வைத்தனர். அந்த விடயங்கள் தொடர்பாகவும் பரிசிலனை மேற்கொண்டு உரிய தீர்வு எட்டப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இ.தொ.காவின் நிதிச்செயலாளருமான ராமேஸ்வரன், அமைச்சின் செயலாளர், நிர்வழங்கல் சபையின் தலைவர், அதிகாரிகள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

# பல மில்லியன் ரூபா செலவு செய்து சுதந்திர தின நிகழ்வு அவசியமா?

## தேடும் உறவுகள் சங்க மன்னார் தலைவி தெரிவிப்பு



நாட்டில் மக்கள் பல விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ள போதும் பல மில்லியன் ரூபா செலவு செய்து இந்த நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாட வேண்டுமா? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் ஒன்றிய தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஜனாதிபதி தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் பொருளாதார நிலை மிகவும் மோசமாக உள்ள நிலையில் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த சுதந்திர தினம் கொண்டாடப்படுவது அவசியமானதா?

சுதந்திரம் இல்லாத இந்த நாட்டுக்கு சுதந்திர தினம் தேவையா? இந்த நாட்டில் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் நிலையில் பல குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர். விவசாயிகள் இன்று வீதிக்கு வரும் நிலையில் உள்ளனர். இவ்வாறு நாட்டில் மக்கள் பல விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ள போதும் எவ்வளவு மில்லியன் ரூபா செலவு செய்து இந்த சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாட வேண்டுமா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் வீதியில் இறங்கி போராடி வருகிறோம்.

பல வருடங்களாக போராடி வருகிறோம். தமிழர்களாக இருந்தாலும் சிங்களவர்களாக இருந்தாலும் சரி இந்த நாட்டில் மக்கள் பல வித பிரச்சினைகளுக்கு இன்று வரை முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் யாருக்காக இவ்வளவு மில்லியன் ரூபா நிதி செலவு செய்து இந்த சுதந்திர தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. – என்று தெரிவித்தார்.

# எல்லை நிர்ணய நடவடிக்கைகள் உள்ளூராட்சி தேர்தலை பாதிக்கா!

## மஹிந்த தேசப்பிரிய மீண்டும் அறிவிப்பு



எல்லை நிர்ணய நடவடிக்கைகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எந்த வகையிலும் பாதிக்காது என எல்லை நிர்ணய சபையின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய சபையின் அறிக்கை மார்ச் மாதம் 9 ஆம் திகதிக்கு பின்னரே ஒப்படைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை நிர்ணய சபையின் செயற்பாடுகளால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கு எந்த சிக்கல்களும் உருவாகப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு முன்னாள் பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் காலமானார்



கொழும்பின் முன்னாள் பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை காலமானார். கொழும்பு பேராயராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் ஆண்டகை ஒஸ்வல்ட் கோமிஸ் நீண்ட காலம் கடமையாற்றியுள்ளார். முன்னாள் பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை காலமாகும் போது அன்னாருக்கு 90 வயது என்பது குறிப்பிடத்தக்கது தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, இறைவனுள் நித்திய இளைப்பாறினார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 26 பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவியுயர்வு

அவசர தேவைகளின் அவசியத்தை கருத்திற்கொண்டு 26 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பல்வேறு பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் அத்தியட்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவின் சிபார்சுக்கமைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# வன்புணர்வுக்கு முயன்றவரின் விரலை கடித்துத் துப்பிய பெண்

கந்தேகெட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நள்ளிரவில் பலவந்தமாக நுழைந்து பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முற்பட்ட நபரொருவரின் விரல் ஒன்றை கடித்து எறிந்துள்ளார் அந்த பெண்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துக்குப் பின்னர் காயமடைந்த நபர் அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றார் எனவும் ஆனால் காயமடைந்த விரலுக்கு சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமைக்கான எந்த தகவலும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் வீட்டில் தனியாக இருந்த போது, அத்துமீறி நுழைந்த நபர் தன்னை ஒரு பெட்ஷீட்டில் சுற்றிக் கொண்டு, அடையாளம் தெரியாத வகையில் சென்றுள்ளார். இருப்பினும், அந்த நபர் வலுக்கட்டாயமாக பாலியல் வன்புணர்வுக்கு முயன்றபோது, அந்தப் பெண் அவருடைய ஒரு விரலைக் கடித்ததால் அவர் கடுமையான வலியுடன் ஓடினார்.

பெண் உடனடியாக 119 இற்கு அழைப்பு விடுத்து விசாரணைகளை ஆரம்பித்ததன் பேரில் தங்கெட்டிய பொலிஸ் குழுவொன்று சம்பவ இடத்துக்கு விரைந்தது. எனினும் சந்தேக நபரை அடையாளம் காண முடியவில்லை என பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். குறித்த நபரை கைது செய்ய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுதந்திரதினத்தில் நேபாள அமைச்சர்



இலங்கையின் 75 ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நேபாளத்தின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி பிமலா ராய் பௌட்யால் நாட்டுக்கு வருகைதரவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின் பேரில் நாட்டுக்கு வருகைதர வுள்ள நேபாள வெளிவிவகார அமைச்சர் பிமலா ராய் பௌட் யால், நாளை (சனிக்கிழமை) கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ள சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொள்வார்.

அதுமாத்திரமன்றி நாட்டின் உயர்மட்ட அதிகாரிகள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடுவ தற்குத் திட்டமிட்டுள்ள அவர், இன்று (வெள்ளிக்கிழமை) ஜனாதிபதி செயலகத்தால் சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'லங்காரலங்கா' என்ற கலாசார நிகழ்வி லும் பங்கேற்கவுள்ளார்.

மேலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்திக்கவுள்ள பிமலா ராய் பௌட்யால், ஜனா திபதியின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உபசார நிகழ்விலும் பங்கேற்பதோடு ஞாயிறன்று மீண்டும் நேபாளம் திரும்புவார்.

# வரிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த கட்டுநாயக்கப் பணியாளர்கள்




கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பல்வேறு தொழில் வல்லுநர்கள் தமது சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட வரிக்கு எதிராக வியாழக்கிழமை நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்புப் பிரசாரம் ஒன்றை முன்னெடுத்தனர்.

விமான நிலையங்கள் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் மற்றும் விமான நிலையங்கள் மற்றும் இலங்கை ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டம் மற்றும் எதிர்ப்பு இயக்கத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் விமான நிலைய நிர்வாகத் தலைவர், தலைமை விமானக் கட்டுப்பாட்டாளர், விமான நிலையக் கடமை அதிகாரிகள், விமான நிலைய பாதுகாப்புத் தலைவர்கள், சிறிலங்கன் ஏர்லைன்ஸ் தலைவர்கள், விமானப் பணிப்பெண்கள், விமானப் பராமரிப்பு மற்றும் தொழில்துறை ஊழியர்கள் உட்பட விமான நிலையம் மற்றும் சிறிலங்கன் ஏர்லைன்ஸின் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு மட்ட அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

அங்கு, 'வாழ்க்கைச் செலவு விண்ணை முட்டும், குழந்தைகள் பசியால் கதறி அழுகின்றன, இருக்கும் சம்பளம் நக்க, ரணில் கெலியா போனது' போன்ற கோஷங்களை எழுப்பினர்.

# இந்திய மகளிர் அணியை தோற்கடித்த தெ.ஆபிரிக்கா



ரி20 முத்தரப்புத் தொடர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி சாம்பி யன் பட்டத்தை கைப்பற்றியது தென்னாப்பிரிக்கா.

தென்னாப்பிரிக்காவில் ரி20 மகளிா உலகக் கோப்பை போட்டி நடைபெறவுள்ளது. அதற்கு தயாராகும் வகையில் இந்தியா, தென்னாப்பிரிக்கா, மே.இந்திய தீவுகள் பங்கேற்ற முத்தரப்பு தொடா நடைபெற்றது. இதில் மே.இந்திய தீவுகள் வெளியே றிய நிலையில் இறுதி ஆட்டத்துக்கு தென்னாப்பிரிக்கா-இந்திய அணிகள் தகுதி பெற்றன. ஈஸ்ட் லண்டனில் இறுதி ஆட்டம் வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பாட்டத் தைத் தோவு செய்தது.

இந்திய அணி தரப்பில் தொடக்க துடப்பாட்டக் காரர்கள் ஸ்மிருதி மந்தனா-ஜெமீமா ரோட்ரீக்ஸ் களமிறங்கினா. 8 பந்துகளை எதிர்கொண்ட நிலை யில், மாபா பந்தில் போல்டாகி டக் அவுட்டானாா மந் தனா. அடுத்து ஜெமீம ாவையும் 11 ஓட்டங்களுடன் பெவிலியன் அனுப்பினாா மாபா. அதைத் தொடாந்து அணித் தலைவர் ஹா மன்ப்ரீத் கௌர்-ஹாலின் தியோல் ஒரளவு நிலைத்து ஆடினா. 21 ஓட்டங்களுடன் ஹாமன்ப்ரீத் வெளியேறிய நிலையில், 4 பவுண்டரியுடன் 46 ஓட்டங்களை விளாசினாா ஹாலின்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவாகளில் 109/4 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது இந்தியா. தீப்தி சாமா 16, பூஜா வஸ்தராக்கா 1 ஒட்டங்களுடன் களத்தில் இருந்தனா. தென்னாப்பிரிக்க தரப்பில் மாபா 2 விக்கெட்டை வீழ்த்தி னார். 110 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களம் கண்ட தென்னாப்பிரிக்க தொடக்க வரிசை துடுப்பாளர்களும் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினா. லாரா வொல்வாட் 0, டஸ்மின் பிரிட்ஸ் 8, லாரா குட் ஆல் 7, கேப்டன் சூன் லஸ் 12, டெக்காஸன் 8 என்று ஒருவர் பின் ஒருவராக நடையைக் கட்டினர். எவரும் நிலைக்கவில்லை.

மறுமுனையில் நிலைத்து ஆடிய குளோ ட்ரையான் 2 சிக்ஸா, 6 பவுண்டரியுடன் 32 பந்துகளில் 57 ஓட்டங்களுடன் அரைசதம் விளாசினார். நடின் டீ கிளார்க் 17 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

18 ஓவாகளில் 113/5 ஓட்டங்களைச் சோத்த தென்னாப்பிரிக்கா 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தி யாவை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. இந்திய தரப்பில் ஸ்நே ராணா 2 விக்கெட்டை வீழ்த்தினார். இந்தி ய வீராங்கனை தீப்தி சாமா தொடா நாயகியாகவும், தென்னாப்பிரிக்க வீராங்கனை குளோ டிரையான் ஆட்ட நாயகியாகவும் தோவு செய்யப்பட்டனா.

## ஐரோப்பிய உதைபந்து லீக் முடிவுகள்

ஐரோப்பிய கால்பந்து லீக் தொடாகளின் ஒரு பகுதியாக பிஎஸ்ஜி, பார்சிலோனா அணிகள் தத்தமது ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளன. பிரான்ஸின் லீக் 1 கால்பந்து போட்டியில் பாரிஸ் செயின்ட் ஜொமன் (பிஎஸ்ஜி) அணி 3-1 என்ற கோல் கணக்கில் மான்ட்பெல் லியரை வீழ்த்தியது.

நட்சத்திர வீரா மாப்பே, 2 பெனால்டி கிக் வாய்ப்புகளைத் தவற விட்ட நிலையில், காயமடைந்து வெளியேறினார். மாப்பே இல்லாத நிலையில், பிஎஸ்ஜி அணியினா முதல் பாதியில் தடுமாறினா. இரண்டாம் பாதி தொடக்கத்தில் பிஎஸ்ஜி வீரா ஃபேபியன் ரூய்ஸ் 52ஆவது நிமிடத்தில் முதல் கோலடித்தார்.

தொடாந்து நட்சத்திர வீரா லயோனல் மெஸ்ஸி 72ஆவது நிமிடத்தில் கோலடிக்க 2-0 என பிஎஸ்ஜி முன்னிலை பெற்றது. மான்ட்பெல்லியா அணி தரப்பில் அமட் நார்ட்டின் 89ஆவது நிமிடத்தில் கோலடித்து அதிர்ச்சி அளித்தார்.

கூடுதல் நிமிடத்தில் பிஎஸ்ஜி வீரா வாரென் எமிரி கோலடிக்க பிஎஸ்ஜி 3-1 என வென்றது. ஏனைய ஆட்டங்களில் ரென்னஸ் 3-0 என ஸ்ட்ராஸ்போர்க்கையும், நைஸ் 1-0 என லென்ஸையும், மொனாக்கோ 3-2 என ஆஸ்ஸ்ரையும் வீழ்த்தின.

ஸ்பானிஷ் கால்பந்து லீக் தொடரில் பலம் வாய்ந்த பார்சிலோனா எஃப்சி அணி 2-1 என்ற கோல் கணக்கில் ரியல் பெட்டிஸ் அணியை வீழ்த்தியது. ரபின்ஹா 65ஆவது நிமிடத்தில் முதல் கோலடித்தார். நட்சத்திர வீரா ராபாட் லெவண்டோவ்ஸ்கி 80ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலடித்தார். இந்த சீசனில் அவா அடிக்கும் முதல் கோலாகும். 85ஆவது நிமிடத்தில் பார்சி லோனா டிபன்டா ஜுலிஸ் கோண்ட் சொந்த கோலடித்தார். சொந்த மைதானத்தில் பார்சிலோனாவுக்கு எதிராக பெட்டிஸ் பெறும் 6ஆவது தோல்வி ஆகும்.

இத்தாலியின் சீரி ஏ லீக் தொடரில் கடைசி இடத்தில் உள்ள கிரிமோனைஸ் 2-1 என்ற கோல் கணக்கில் ரோமா அணிக்கு அதி ர்ச்சி தோல்வியை தந்தது. இதன் மூலம் 36 ஆண்டுகளில் முதன்முறையாக அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. அரையிறுதியில் புளோரென்டினா அணியை எதிர்கொள்கிறது கிரிமோனைஸ்.

ஜொமனியின் பண்டஸ்லிகா தொடரில் பேயான் முனிச் அணி 4-0 என்ற கோல் கணக்கில் மெயின்ஸ் அணியை வீழ்த்தி யது. நடப்பு சாம்பியன் லீப்ஸிக் 3-1 என ஹாப்பன்ஹீமை வீழ்த்தியது. யூனியன் பொலின், ஸ்டட்காட் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இங்கிலாந்தின் லீக் கோப்பை அரையிறுதியில் மான்செஸ்டா யுனைடெட் அணி 2-0 என நாட்டிங்ஹாம் பாரஸ்டை வீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றது.

## இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. எனினும் தொடரை 2-1 என தென்னாப்பிரிக்காவிடம் இழந்தது.

3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாப் பிரிக்க அணி ஏற்கனவே 2 ஆட்டங்கைளில் வென்று தொடரைக்கைப்பற்றியிருந்தது. இந்நிலையில் கிம்பாலியில் கடைசி ஆட்டம் புதன்கிழமை இரவு நடைபெற்றது.

இங்கிலாந்தின் தொடக்கம் சரியாக அமைந்தி ருக்கவில்லை. 2ஆவது ஒருநாள் போட்டியில் 343 ஓட்டங்களை அனாயசமாக விரட்டியதையடுத்து 3ஆவது போட்டியிலும் நாணயச் சுழற்சியில் வென்ற கேப்டன் தெம்பா பவுமா, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதற்குத் தகுந்தாற்போல் இங்கிலாந்தும் சொதப்ப. லுங்கி இங்கிடி அபாரமாக வீசி 3 விக்கெட்டுகளைச் சாய்த்தார். ஜேசன் ராய் (1), பென் டக்கெட் (0), ஹாரி புரூக் (6) ஆகியோர் வெளியேற இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 14 ஓட்டங்களை எடுத்து சரிவில் இருந்தது. எனினும் இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவாகளில் 346/7 ஓட்டங்களைக் குவித்தது. டேவிட் மலான்-ஜோஸ் பட்லா இணை அதிரடி சதமடித்தது.

தொடக்க துடுப்பாட்டக்காரரான டேவிட் மலான் 6 சிக்ஸா, 7 பவுண்டரியுடன் 114 பந்துகளில் 118 ஓட்டங்களையும், அணித் தலைவர் ஜோஸ் பட்லா 7 சிக்ஸா, 6 பவுண்டரியுடன் 127 பந்துகளில் 131 ஓட்டங்களையும் விளாசினா. மொயின் 41 ஒட்டங்களுடன் களத்தில் இருந்தார். பின்னால் வந்தவர்களும் தங்களது பங்களிப்பை கொடுக்க இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 346 ஓட்டங்களை இங்கிலாந்து அணி மொ ாத்தம் 19 சிக்ஸ், 16 பவுண்டரிகளை விளாசி இருந்தது.

தென்னாப்பிரிக்க தரப்பில் லுங்கி நிகிடி 4, மார்கோ ஜேன்ஸன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினா.

பின்னா ஆடிய தென்னாப்பிரிக்க அணி 43.1 ஓவாகளில் 287 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. ஹென்ரிச் க்ளாஸன் 80, ரீஸா ஹென்ட்ரிக்ஸ் 52 ஓட்டங்களை விளாசினா.

இங்கிலாந்து 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றிபெற்றது. இங்கிலாந்து தரப்பில் ஜோஃப்ரா ஆர்ச்சா அற்புதமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

2 ஆண்டுகள் வனவாசத்திற்குப் பின் தன் மீள் வரவை வலுவாக நிகழ்த்திய ஜோப்ரா ஆர்ச்சர், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஸ் டெஸ்ட் தொடருக்கு தான் தயார் என்று சொல்லாமல் சவால் விடுத்துள்ளார். அதோடு உலகக்கோப்பை அச்சுறுத்தலையும் கொடுத்துள்ளார்.

தென் ஆப்பிரிக்கா அணி நன்றாக இலக்கை விரட்டித்தான் வந்தது. ஆனால் ஜோப்ரா ஆர்ச்சர் தன் பழைய ஆக்ரோ பந்துவீச்சைக் கண்டுப்பிடித்துக் கொண்டதையடுத்து 40 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 6விக்கெட்டுகளைக்கைப்பற்றினார். தென்னாபிரிக்காவுக்குத் தோல்வியையும் கொடுத்தார்.

## பவுமாவாவுக்கு மீண்டும் வாய்ப்பு

*இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடிய தென்னாப்பிரிக்க கேப்டன் பவுமாவுக்கு அந்த நாட்டின் எஸ்.ஏ.20 லீக் போட்டியில் விளையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது.*

*கடந்த வருடம் நடைபெற்ற எஸ்ஏ.20 ஏலத்தில் பவுமாவை எந்த அணியும் தேர்வு செய்யவில்லை. தென்னாப்பிரிக்க வெள்ளைப் பந்து அணிகளின் தலைவராக இருந்தும் ஏலத்தில் யாரும் தன்னைச் சீந்தாததால் தன் திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.*

*சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராக விளையாடிய ஒருநாள் தொடரில் ஒரு சதம் உள்பட 180 ஓட்டங்கள் எடுத் தார். 23 பவுண்டரிகளும் 3 சிக்ஸர்களும் அடித்தார். ஸ்டிரைக் ரேட் - 114.64. ஒருநாள் தொடரை தென்னாப்பிரிக்க அணி வெல்வதற்கு முக்கியக் காரணமாக இருந்தார்.*

*இதையடுத்து சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் அணி, டாம் அபெலுக்குப் பதிலாக பவுமாவைத் தேர்வு செய்துள்ளது.*

*ஜனவரி 10 அன்று தொடங்கிய எஸ்ஏ20 போட்டி, பெப்ரவரி 11 அன்று நிறைவு பெறுகிறது. 8 ஆட்டங்களில் 4 வெற்றி களைப் பெற்று 17 புள்ளிகளுடன் புள் ளிகள் பட்டியலில் 2ஆம் இடத்தில் உள்ளது சன்ரைசர்ஸ் அணி.*



வட இந்திய புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த,வேதாந்த வித்துவான் சாயிஸ்ரீ வேதநாராயன் கடந்த வாரம் கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயிபாபா ஆலயத்தில் நடைபெற்ற ஆரத்தி பூஜையில் கலந்துகொண்டார். ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன், சாயி நிலையத்தின் 50ஆவது ஆண்டு பூர்த்தி பொன்விழா மலரை வேதாந்த வித்துவானிடம் வைபவரீதியாக கையளிப்பதையும் , நிகழ்வில் பங்கேற்க சாயி நிலைய பொதுச்செயலாளர் எஸ். தியாகராஜா, உபதலைவர் சிவா இராஜஜோதி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# பெரிய பண்டிவிரிச்சானில் சிறுவர் நூலகம் திறப்பு



தென்மராட்சி, ஜன 3

ஒன்றுகூடுவோம்இலங்கை அமைப்பின்ஏற்பாட்டில்கடந்த திங்கட்கிழமை மன்னார்-பெரியபண்டிவிரிச்சானில் சிறுவர்களுக்கான நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

அமைப்பின் வடமாகாண நிலைய முகாமையாளரின் ஏற்பாட்டில் மடு பிரதேச செயலர், கிராம சேவகர், அமைப்பின் வடமாகான இணைப்பாளர், கிராம மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் உதவியுடன் குறித்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

நூலகத்திற்கு புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் புத்தக அலுமாரி ஒன்றும் வழங்கப்பட்டது.

## ஸ்ரீசங்கருக்கு நினைவஞ்சலி

இலங்கையில் தமிழ் மேடைநாடகம்,திரைப்படத் துறையில் முன்னோடியாக விளங்கிய கலைவேந்தன் ஸ்ரீசங்கரின் 43 ஆவது மறைவுதினம்கொழும்பில்வரும் 12ஆம்திகதி நினைவுகூரப்படவுள்ளது.

யாழ். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்பில் மேடை நாடகத் துறையில் ஆற்றிய பணிகள் வரலாற்று சிறப்பு மிக்கவை. ஈழத்து நாடகத்துறையின் பிதாமகன் எனக் கருதப்படும் கலையரசு சொர்ணலிங்கம் இவரது நாடகப்பணியை பாராட்டி கலைவேந்தன் எனப் பட்டமளித்து கௌரவித்தார்.

திரைப்படத்துறையில்நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் ராஜராஜசோழன் திரைப்படத்தில்நடித்தநம்நாட்டுக்கலைஞர் என்ற பெருமைக்குரியவர்.

இவரது நினைவு தினத்தை அவரது சிஷ்யன் சண்முகராஜா கடந்த 42 ஆண்டுகளாக அனுஷ்டித்து வருகின்றார். ஸ்ரீசங்கர் நற்பணி மன்றம் என்ற அமைப்பை உருவாக்கி 2006ஆம்ஆண்டுகொழும்பில் இவருக்கு சிலை ஒன்றை நிறுவியுள்ளார்.

இந்த நினைவு தினம் கொழும்பு பழைய நகரசபை மண்டபத்தில் கொழும்பு மாநகர பிரதி மேயர் எம். ஜ .எம். இக்பால் தலைமையில் நடைபெறவுள்ளது.

# ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். என்பன இந்தியாவின் முகவர்கள்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாட்டை

கொள்கை என்ற பெயரில் இந்தியாவிற்கு விசுவாசமாக நின்று இனத்தை விற்பதே தமிழ் கட்சிகளிடையிலான போட்டி என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியன இந்தியாவின் முகவர்கள் என்றும் விமர்சித்துள்ளார்.

வவுனியாவிற்கு விஜயம் செய்த அவர் தேர்தல் பரப்புரை கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்ததாவது:

இது ஓர் உள்ளூராட்சி தேர்தலாக இருந்தாலும் இந்த சூழலை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் பொருளாதார ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ எந்தவிதமான முன்னேற்றமும் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை.

போர் குற்றத்துக்கும் தீர்வு கிடைக்கவில்லை. எமது விடயங்கள் சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட தரப்பான நாங்கள் முன்னேற்றமடையாமலே இருக்கிறோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒரு கொடூரமான சட்டமாக சொன்னாலும், அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சிங்கள மக்கள் விடுவிக்கப்படுகின்றார்களே தவிர தமிழ்மக்கள் தொடர்ச்சியாக சிறைகளிலேயே வாடுகின்றனர்.

அத்துடன் இன்று அனைவராலும் பேசப்படும் 13 ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற ஒரு கட்டமைப்பு. ஒற்றையாட்சி என்பது சிங்கள பௌத்த ஆட்சி. வேறு எவருக்கும் அங்கு அதிகாரம் இல்லை.

அதனாலேயே தமிழ் பெருந்தலைவர்கள் நீண்ட காலமாக இதனை நிராகரித்து வந்திருக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் கூட அதனை ஏற்றுகொள்ளவில்லை.

எங்களால் தெரிவு செய்யப்படுகின்றவர்கள், இந்த படுமோசமான ஏமாற்று வேலைக்கு விலை போனமையினாலேயே இந்த திருத்தம் பற்றி பலரும் இன்றுபேசுகின்றார்கள். அதுவேஉண்மை.

இதனை நாம் எவ்வாறு மாற்றப் போகின்றோம். இந்த தேர்தல் ஊடாக மக்கள் தமது அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

போர் முடிவடைந்து 14 வருடங்களாக தமிழர்கள் கஷ்டபடுகிறார்கள், எனில் அதில் தவறு உள்ளது. அதனை நிவர்த்தி செய்வதற்கு உங்கள் கையில் இருப்பது வாக்கு மாத்திரமே.

எனவே இத்தனை வருடங்களாக உங்களை ஏமாற்றிய அதே தரப்பிற்கே வழங்க போகின்றீர்கள் என்றால் நீங்கள் அதற்கு இணங்குகின்றீர்கள் என்றே உலகம் நோக்கும்.

இதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த 14 வருடங்களாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மக்களிடத்தில் தெளிவை ஏற்படுத்தி வருகின்றோம். நாம் சொன்ன ஒவ்வொன்றும் இன்று உங்கள் கண்முன்னே நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் எங்களை நிராகரித்தார்கள் ஆனால் நாம் மீண்டும் மக்களிடத்திலே வந்தோம். இன்று எம்மைத்தவிர அனைத்து தரப்புக்களும் 13 வது திருத்தத்தை ஏற்கும் நிலையிலேயே உள்ளன. நாம் மாத்திரமே கொள்கை அளவில் மறுத்து நிற்கின்றோம்.

விக்னேஸ்வரன் தனக்கு செயலாளர் பதவி தரவில்லை என்று பிரிகின்றார். ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் ஆகிய இந்தியாவின் முகவர் அமைப்புக்களும் தங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை என்று பிரிகின்றார்கள்.

இவர்கள் பிரிந்து நிற்பதற்கு காரணம் கொள்கையல்ல பதவி. அனைவரும் கொள்கை என்ற பெயரில் இனத்தை விற்பதற்குத் தயாராகியுள்ளனர்.

யார்இந்தியாவிற்குஅதிகமாகவிசுவாசமாக நின்று இனத்தை விற்கலாம் என்பதே அவர்களுக்கிடையிலான போட்டி. அதற்காவே பிரிந்து நிற்கின்றார்கள்.

இவை அனைத்தும் தெரிந்தும் எம்மை ஆதரிக்காமல் பிரிந்து நின்று ஒற்றையாட்சிக்குள் முடங்கிப்போயுள்ள தரப்புகளுக்கு வாக்குகளை வழங்கினால் இந்த தேர்தலுக்கு பின்னரான தமிழர் அரசியல் உரிமை பயணம் முடிவிற்கே வரும்.

எமது அரசியலும் ஒற்றையாட்சிக்குள் நிரந்தரமாக முடங்கிப்போகும். எனவே மக்களாகிய நீங்களே முடிவெடுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.



# கல்விக்கு கைகொடுப்போம் நிகழ்வு சாவகச்சேரியில்

தென்மராட்சி, பெப். 3

தென்மராட்சிநிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கல்விக்கு கை கொடுப்போம் திட்டத்தின் கீழ் கடந்த வார இறுதியில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு உதவுதொகையும் வழங்கப்பட்டது.

அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழி போராட்டக்குழு மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி இராஜதுரை அபிராமியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றிய இணைப்பாளர் இரா.சத்தியசீலனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் விசேட அம்சமாக 2020ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற பிரதேச மாண வர்கள், மதிப்புயர் சேவையாளர்கள் கௌரவிக் கப் பட்டனர். 2023ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான உதவுதொகையும் வழங்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.02.2023 இல் வெளியிடப்பெற்றது.